# அமைச்சர் ரஞ்சன் சுங்க பரிசோதனையை அடுத்தே தமிழீழ எல்லைக்குள் பிரவேசிக்க முடியும்! - வரதர்

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு, வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன, தமிழீழ அரசின் எல்லைக்குள் வருவதாயின், சுங்கப் பரிசோதனைக்கு உட்பட்டதற்கான அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று வடக்கு-கிழக்கு மாகாணசபை முன்னாள் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

நாட்டின் சுங்க நடவடிக்கைகளுக்கு அமையாமல், திரு. வரதராஜப்பெருமாள் அண்மையில் மேற்கொண்ட இந்திய விஜயம் குறித்து இடம்பெற்றுவரும் சுங்க இலாகாவின் விசாரணை பற்றி அவரது அபிப்பிராயம் என்ன? என்று

(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 22 ஷஃபான் பிறை: 8 இதழ்: 21

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 06-03-1990

## ஆசிரியர் இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டன

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல ஆசிரியர்களினதும், இடமாற்றங்கள், கல்வி சேவைகள் ஆணைக்குழுவினால் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை ரீதியிலான பாடசாலை ஆசிரியர்களது புள்ளி விபரத்திரட்டு வேலைகள் முடிவு அடையும்வரை இவ் இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர் இடமாற்றங்களில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகப் பெருந்தொகையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மேற்

(8-ம் பக்கம் பார்க்க)

மின்சார நிலுவை செலுத்தப்படாததால்

# யாழ். மாநகரசபை பகுதியில் உபமின்நிலைய வேலை பாதிப்பு

## 2 கோடியே 80 லட்சம் ரூபா மின்சார சபைக்கு செலுத்தவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை, மின்சார சபைக்கு நாலுகோடியே எழுபது லட்சம் ரூபாவை நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளது. இத்தொகையில் ஒரு கோடியே தொண்ணூறு லட்சம் ரூபா மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மீதித்தொகையைச் செலுத்தினால் மட்டுமே, மின்சாரசபை யாழ். மாநகரசபைப் பகுதியில் உடனடியாக மேற்கொள்ளப்படக்கூடிய உப-மின்நிலைய அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் அவர் இதுகுறித்துத் தகவல் "ஈழநாடு"வுக்கு தெரிவித்தார்.

தருகையில் மின்சார சபைகளவாக மின்சாரம் பெறு

(8-ம் பக்கம் பார்க்க)

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்:

## 20 கோடி ரூபா ஒதுக்கீடு!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகள் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசாங்கம் 20 கோடி ரூபாவுக்கும் மேல் ஒதுக்கியுள்ளது.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டவர்களதும் சகல விபரங்களையும் உதவி அரசாங்க அதிபர்கள் திரட்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரியான முறையில் கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டபின் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (சி)

வடக்கு கிழக்கில்

## இராணுவ நடவடிக்கை எடுத்தபோது நாடு சீர்குலைவுக்குள்ளானது!

- ஜனாதிபதி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மக்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுத்தபோது அதிகரித்த நிலைமைகளினால் நாடு முழுவதும் சீர்குலைவுக்குள்ளானது.

எங்கள் சொந்த மக்கள் மீது யுத்தம் செய்யாத ஒருராணுவ கடற்படை, விமானப் படை, பொலிஸ் படையே எமக்கு வேண்டும், அதுவே எனது அரசாங்கத்தின் கருத்தும் கொள்கையுமாகும்,

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா இவ்வாறு கூறினார்.

பாதெனிய என்ற இடத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

எமது நாட்டு மக்களையும், நாட்டையும் பாதுகாக்க

(8-ம் பக்கம் பார்க்க)

மன்னாரில்

## 602 குடும்பங்களுக்கு ஒன்றரைக்கோடி ரூபா வழங்கப்பட்டது

(மன்னார்)

நாட்டில் அண்மைக் காலங்களில் நடைபெற்ற வன்செயல்களினால் உயிரிழந்த குடும்பங்களில், இதுவரையில் மன்னார் மாவட்டத்தில் 602 குடும்பங்களுக்கு மன்னார் புனர்வாழ்வு அலுவலகம், ஒன்றரை கோடி ரூபாவை வழங்கியுள்ளது. காயப்பட்ட 103 குடும்பங்களுக்கு 12 லட்சம் ரூபாய் வழங்கியும் இடம்பெயர்ந்தவர்களுக்கென 4 கோடியே 10 லட்சம் ரூபாவும், பொருளாதார பாதிப்பு

(8ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

கல்விச் சேவை ஆணைக்குழு, பயிற்சி ஆசிரியர்களாக நியமிப்பதற்குத் தொண்டர் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அரசாங்கப் பாடசாலை ஒன்றில் குறைந்தது ஒரு வருடம் சேவையாற்றியுள்ள தொண்டர் ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக அவர்கள் இருக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் இம்மாதம் 16ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

## பட்டதாரிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்க புதிய திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்கும் திட்டமொன்றை அமுல்செய்வதென உயர்கல்வி விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சு முடிவுசெய்துள்ளது.

இத்திட்டத்தின் பயனாக, பல்கலைக்கழகங்களில் இருந்து மிகவிரைவில் வெளியேறவிருக்கும் சுமார் 4,000 பட்டதாரிகள் நன்மை அடையவுள்ளார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

சேவ்ரி ரவல்ஸ்

யாழ் - கொழும்பு - யாழ். பஸ் சேவை

எமது தினசரி இரவு பஸ்சேவை மாலை 6-00 மணிக்கு 'இரட்ணம் பார்மஸி' முன்பாக ஆரம்பமாகும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பிரயாணம் செய்பவர்களுக்கு பகல் நேர இளைப்பாற்று வசதிகள் இலவசம்.

102, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (A-585) சேவ்ரி ரவல்ஸ் ஸ்தாபனம்.

## வரி விளம்பரம்

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறேயிலர் குஞ்சுகள் கறுப்பு. சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet, HylineBlack, பேட்டுச்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (சி 3505)

### நாவல்கள்

மீரா வெளியீடு கே. எஸ் ஆனந்தன் எழுதிய ''பூஜைக்காக வாழும்பூவை'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பூவை ஒருத்தியின் புனித வாழ்வை சித்தரிக்கும் குடும்ப நாவல். ராஜன் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். All Ceylon Distributors, Jaffna - Colombo. (சி 3572)

### பார்மசி வகுப்புக்கள்

பார்மசி ஆரம்ப/மீட்டல் வகுப்புக்கள் இலங்கை மருத்துவ கல்லூரியால் நடாத்தப்படும். பார்மசி பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்களுக்கான வகுப்புக்கள் தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளன தகுதி: க பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தி மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்க நோர்தேன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 3570)


# வைத்திய வசதியின்றி நோயாளர் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வேராவில், கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, பாலாவி போன்ற ஐந்து கிராமங்களைச் சேர்ந்த அனைத்துமக்களும் வைத்திய வசதியற்ற நிலையில் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

மேற்படி கிராமங்களுக்குப் பொதுவாக வேராவில் பத்தியில் ஒரு அரசாங்க மருத்துவமனை மட்டுமே உள்ளது. இவ் வைத்தியசாலையில் போதிய ஊழியர்கள் இருந்தபோதிலும் மருந்து வகைகள் இல்லை. இதன் காரணமாக சுமார் இருபது மைல் தூரத்திலிருக்கும் பூநகரி வைத்தியசாலைக்கே நோயாளர்கள் செல்ல வேண்டியுள்ளது. [56]

## அரவம் தீண்டி மரணம்

(மட்டுவில்)

வயலுக்கு நெல் அறுவடை செய்யச்சென்ற பெண் ஒருவர் புடையன் பாம்பினால் கடியுண்டு மரணமானார்.

நுணாவில கிழக்கைச் சேர்ந்த சி தங்கம் (வயது 52) வயோதிப மாதே மரணமானவராவார்.

இவர் வயலுக்கு அருவி வெட்டச் சென்றபோது வயல் வரம்பில் கிடந்த புடையன் பாம்பு அவரைத் தீண்டியது உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டும் அவர் அங்கு மரணமானார். (82)

## 8 ரேடியோக்கள் புலிகளால் மீட்பு

(மாங்குளம்)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் 18 ரேடியோவும் ஒரு கமராவும் மீட்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளலாமென மாங்குளம் தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. ஜொனி தெரிவித்தார்.

உரியவர்கள் மாங்குளம் விஸ்வா ஹோட்டல் முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (150)

## யாழ். ஊனமுற்றோர் சங்க செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் யாழ் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் என உடல் ஊனமுற்றவர்களுக்கான ஒரு பொதுவான சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இச்சங்கத்தில் ஜெய்ப்பூர் செயறகை அவயப்பாவனையாளர் சங்கம், யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், செவிப்புலனற்றோர் சங்கம் வடமராட்சி உடலூனமுற்றோர் சங்கம், யாழ். உடல் ஊனமுற்றோர் சங்கம் ஆகிய சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு தாய்ச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளனர்

ஐம்பது வீதமும் ஊனமுற்றோரே பங்குகொள்ளும் நிர்வாகசபை ஒன்றும் அன்றைய தினம் தெரிவு செய்யப்பட்டது

### செயற்பாடுகள்

இச்சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி நிர்வாகஉறுப்பினரான பி. அசோகன் தெரிவிக்கையில்; ''உலகநாடுகளில் உடல் ஊனமுற்றவர்களுக்கு வருமானவரியிலிருந்து பூரண விலக்கு, 'இலவச போக்குவரத்து வசதி: அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் நியமனங்களில் குறிப்பிட்ட வீதம் ஒதுக்கி அவர்களுக்கு நியமனம்வழங்குவதற்கான வசதி, (இந்தியாவில் ஆறுவீதம், இலங்கையில் மூன்றுவீதம்) பிரயாணம்செய்யும் வாகனங்களில் விசேடமாக ஒதுக்கப்பட்ட அமர்வுகள், இடம்விட்டு இடம்மாறிப் பிரயாணம் செய்கையில் இலவசவிடுதி வசதிபோன்ற இன்னோரன்ன வசதிகள் எல்லாம் அளிக்கப்பட்டுள்ளபோதிலும். எமது மக்கள் மத்தியில் இன்னும் புரிந்துணர்வுகள்ஏற்படாமலிருப்பதை பார்க்கும்போது மிகவும் வேதனையடையவேண்டியுள்ளது'' என்றார்.

''இப்படியான புரிந்துணர்வுகளை நமது சமூகத்தின் மத்தியில் உணரவைப்பதும் அரசரீதியாக சலுகைகளைப் பெற முயற்சிப்பதையும் தவிர பல வேலைத்திட்டங்களையும் உருவாக்கியுள்ளோம் என்று மேலும் தெரிவித்தார்.

கொழும்புத்துறையில் கோழிப்பண்ணை ஒன்றை தற்போது உருவாக்கியுள்ளோம். சுமார் மூவாயிரம் கோழிகள் வளர்க்கக்கூடிய இத்திட்டத்தில் தற்போது 300 கோழிகளுடன் பண்ணையை ஆரம்பித்துள்ளோம். மேலும் வடமராட்சியில் கொப்பிகட்டும் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவவுள்ளோம், ஊனமுற்ற சிறுவர்களுக்கு கட்டாய கல்வி வழங்க ஊக்குவிப்பது ஊனமுற்றவர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கே சென்று அவர்களுக்கான அப்பியாசங்களை வழங்க டாக்டர்களை நியமித்து செயற்படுத்துதல் போன்ற பல திட்டங்களை உருவாக்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

இச்சங்கத்தின் நிர்வாகசபை தெரிவில் தலைவர் டாக்டர் எஸ். சண்முகலிங்கம் உபதலைவர்கள்; எஸ். சிவானந்தராசா றெகான் சின்னையா, செயலாளர், எம். பரராசசிங்கம் உப செயலாளர் டி ஏ தேவசகாயம் பொருளாளர் திருமதி கணேஸ் பாலசிங்கம், வேலைத்திட்ட அதிகாரிவண சகோதரி லூட்ஸ் ஜோசப் ஆகியோரும் டாக்டர் ஆர். கணேசமூர்த்தி, டாக்டர் திருமதி எஸ். கதிர்காமர், டாக்டர் என். சிவராசா, கே. சற்குணசிங்கம், கே. கோபாலகிருஷ்ணன், பி. சுப்பிரமணியம், பி. அசோகன், ஜி. பாலசிங்கம், திருமதி ஆர். சோதிராசா, வண. சகோதரி பற்றிக், செல்வி இதயா அரியரட்ணம் ஆகிய பன்னிரண்டு நிர்வாகம் உறுப்பினரும்தெரிவு செய்யப்பட்டனர். (56)

## யாழ். மாவட்ட புடவைக் கைத்தொழில் அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத் திட்டம் அமுல்

### - உதவிப் பணிப்பாளர் பேட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பின்னடைவு நிலையிலுள்ள புடவைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய புடவைக் கைத்தொழில்அமைச்சு ஐந்தாண்டுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் பிரகாரம் யாழ் மாவட்ட புடவைக்கைத்தொழில் திணைக்களகமும், யாழ் மாவட்ட நெசவாளர் கூட்டுறவு சமாஜமும் ஆறு மாதிரி நெசவுக்கிராமங்களை இம்மாவட்டத்தில் ஏற்படுத்தியுள்ளன

இந்த நெசவுக்கிராமங்களில் நூற்றிமுப்பத்திரெண்டு பெண்களுக்கு நான்கு மாத இலவச பயிற்சியளித்து, பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புநிதி வழங்கவுள்ளன.

இத்தகவலை யாழ் மாவட்ட புடவைக் கைத்தொழில் உதவிப் பணிப்பாளர் திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் 'ஈழநாடு' வுக்கு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தகவல் தருகையில்;இன்று எமது மாவட்டத்தில் கைத்தறி நெசவுத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு அதிஉயர்வான வருமானம் வழங்கப்படாமையாலும், இத்தொழிலுக்கு செல்வது சமூகத்தில் குறைந்த அந்தஸ்துடைய தொழிலாக கருதப்படுவதாலும், இத்துறையில் ஈடுபட பெண்கள் தயக்கம் காட்டிவருகிறார்கள். தற்போது நெசவாளர்களுக்கான சம்பளத் திட்டமொன்றை தொழில் திணைக்களம் அமுல் செய்துள்ளதால் ஓரளவு நிலைமைமாறி முன்னரைபோல இத்துறையில் பெண்களை ஈடுபட வாய்ப்புக்களை வழங்கிவருகின்றோம்.

புடவைக் கைத்தொழில் அமைச்சர் செள. தொண்டமானின் முயற்சியினால் திணைக்களம் கந்தர்மடம், மட்டுவில், பத்தைமேனி ஆகிய இடங்களில் மூன்று நெசவுக்கிராமங்களை ஆரம்பித்துள்ளது. இக் கிராமங்களில் அறுபத்தாறு பெண்கள் பயிற்சி பெறுவதற்காக தெரிவுத்செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மூன்று நெசவுப் பயிற்சி நிலையங்களில் நான்குமாதப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் நாளொன்றுக்கு பதினைந்து ரூபா ஊக்குவிப்புப்படியாக வழங்கப்படும்.

பயிற்சியை முடித்துக்கொண்டபின் பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் இலவசமாக ஒரு கைத்தறியும், நெசவு செய்வதற்கான நூலும் வழங்கப்படும். இவர்கள் உற்பத்தி செய்யும் துணிவகைகள் அனைத்தையும் திணைக்களம் கொள்முதல் செய்வதுடன் அவர்களுக்கான கூலியையும் திணைக்களம் வழங்கும்.

இதேமாதிரியாக யாழ் மாவட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் துன்னாலை வடக்கு, மட்டுவில், நுணாவில், வீமன்காமம் ஆகிய இடங்களில் மாதிரி நெசவு கிராமங்களை ஆரம்பித்துள்ளது. இங்கும் அறுபத்தாறு பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டு சுய தொழில் முயற்சிக்காக தறிகள் இலவசமாக வழங்கப்படும்.

இத்திட்டம் 1995 வரை வருடாவருடம் செயல்படுத்தப்பட்டு ஐந்தாண்டுகளில் 1000 நெசவாளர்கள் தமது தொழிலை சிறப்பாக நடாத்த ஊக்குவிக்கப்படும்.

இதனைவிட யாழ் மாவட்டத்தில் திணைக்களத்தின் நிர்வாகத்தில் இருக்கும் பத்து கைத்தறி நெசவு நிலையங்களில் வருடாவருடம் பயிற்றுவிக்கப்படவிருக்கும் நெசவாளர் தொகையும் அதிகரிக்கப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் தனியார் கைத்தறி நிலையங்களும் மின் நெசவு நிலையங்களும் தற்போது பழையபடி உற்பத்தியை ஆரம்பித்து வருகின்றன. எதிர்காலத்தில் யாழ் மாவட்டம் கைத்தறி உற்பத்தியில் தன்நிறைவுகாணும் என நம்புகிறேன் என்றும் கூறினார். (12)

## மதியபோசன விருந்து

(ஓட்டுசுட்டான்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் மதியபோசன விருந்து அண்மையில் இடம்பெற்றது.

உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மதியபோசனவிருந்துக்கு பிரதம விருந்தினராக (யாழ். பல்கலைக்கழக உடற்கூற்றியல் மருத்துவபீடத் தலைவர் வைத்திய கலாநிதி இ. இ. பிரசாத் கலந்து கொண்டார்.

விருந்துக்கு பல கல்லூரிகளிலிருந்தும் ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவ மாணவிகளும் பங்குபற்றினர். (144)

## இன்று

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலானமெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும்.

கல்லூரி அதிபரும், காங்கேசன்துறைக் கொத்தணி அதிபருமான திரு க. இராசதுரை தலைமையில் நடைபெறும். இப்போட்டிக்கு கல்லூரியின் முன்னாள் அதிபராக இருந்து கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச்சென்ற திரு. எம். சிவராசரத்தினம் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

## செயலாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் செயலாளர்களில் ஒருவராக திரு ஆர். இராமலிங்கம் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வவுனியா நகரசபையில் நீண்டகாலமாக பணியாற்றிவர் என்பது குறிப்பிடத்தக்கது. (12,

## கொக்குவில் மத்தி 1123 குடும்பங்களுக்கு நிவாரணம்

(கொக்குவில்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கொக்குவில் மத்தி கிராம சேவையாளர் பகுதியில் 1123 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்த்தல் கொடுப்பனவாக 1000 ரூபா யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் இம்மாதம் 10ம் திகதி சனிக்கிழமை வழங்கப்படவிருக்கின்றது.

ஏற்கனவே 1000 ரூபா பெற்றுக்கொண்டவர்கள் மட்டும் இதனைப் பெறமுடியும் என்று கொக்குவில் மத்தி கிராம சேவையாளர் திரு. கு அம்பிகைபாகன் தெரிவித்தார். (135)

## திறப்பு விழா

(கிளிநொச்சி)

ஆனையிறவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய விஞ்ஞான ஆய்வுகூட திறப்பு விழாவும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விநாயகர் ஆலய பிரதிஸ்டா விழாவும் அண்மையில் பாடசாலை அதிபர் திரு. என். சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கம், மாவட்ட கோட்டக்கல்வி அதிகாரி திரு தனஞ்சயன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (83)

## நெல் விலை வீழ்ச்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை காலபோக நெற்செய்கை நெல்லுக்கு ஏற்பட்ட நோய் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்

தற்போது நெல் அறுவடை வேகமாக நடைபெற்றுவருகிறது. இம்மாவட்டத்தில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்தும் உள்ளது.

இம்மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இரணைமடுக் குளத்தில் இம்முறை கணிசமான அளவு தண்ணீர் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (83)

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

அராலியில் பம்பாய் வெங்காயச் செய்கைபற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று 6ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று நடைபெறவுள்ளது யாழ். விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொள்ளும் இக்கருத்தரங்கில் இவ்வருடத்திற்கான பம்பாய் வெங்காயச் செய்கை பற்றியும், விதை வெங்காயம் விநியோகிப்பது பற்றியும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கருத்தரங்கிற்கான ஒழுங்குகளைத் தொல்புரம் விவசாய போதனாசிரியர் திரு கோ. பத்மநாதன் செய்துள்ளார். (72)

ஜம்முகாஷ்மீர் விவகாரம்

# இந்திய-பாகிஸ்தான் முறுகலை தவிர்க்க

# எகிப்து அதிபர் சமரச முயற்சி

## சிங்கின் விசேட பிரதிநிதியைச் சந்திப்பார்

(கெய்ரோ)

ஜம்மு-காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்திய - பாகிஸ்தானிடையே எழுந்துள்ள முறுகல் நிலையை தளர்த்த எகிப்து அதிபர் ஹுஸ்னி முபாரக் முன் வந்துள்ளார். இதுதொடர்பாக, தான் இரு தலைவர்களுடனும் பேச்சுக்கள் நடாத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய பிரதமர் திரு. வி. பி. சிங்கின் விசேட செய்தி ஒன்றுடன் அதிபர் திரு. முபாரக்கை சந்திக்க இந்திய எரிசக்தி துறை அமைச்சர் ஜனுப் ஆரிப் முகமட்கான் இவ்வாரம் கெய்ரோ செல்லவுள்ளார்.

கடந்த சில மாதங்களாக ஜம்மு காஷ்மீர் நிலை தொடர்பாக இருநாடுகளிடையேயும் மிகுந்த பதற்றம் நிலவி வருகிறது. இந்திய உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தொடர்ந்து தலையிடுவதாக இந்தியா குற்றம் சாட்டுகிறது. பாகிஸ்தான் பிரதேசத்தை இந்தியா ஆக்கிரமித்துள்ளதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டி வருகிறது.

இதையடுத்து பாகிஸ்தான் தனது பிரதிநிதிகளை முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பியிருந்தது இதன் ஒரு கட்டமாக பாகிஸ்தான் பிரதிநிதிகள் எகிப்து அதிபரையும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினர். இவ்விவகாரத்தில தலையிடுமாறும் அவருக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

ஜனுப் முபாரக் இது பற்றி பிரதமர் திரு வி. பி. சிங்குடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் இதையடுத்தே பிரதமரின் விஷேட செய்தியுடன் அமைச்சர் முகமட் கான் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தீவிரவாதிகளிற்கு ஆதரவு: அதிகாரிகள் வேலை நீக்கம்

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளிற்கு ஆதரவளித்து வந்த 20 அரச அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்தசிலமாதங்களாகஇடம்பெற்றுவரும் அரசு எதிர்ப்பு நடவடிக்கை பலவற்றுக்கும் இந்த அதிகாரிகள் பல விதங்களிலும் உதவி செய்துள்ளமை ஆதாரங்களுடன் தம்மால் நிரூபிக்கமுடியுமென்றும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது ஜம்மு காஷ்மீர் அமைதியாக உள்ளதாகவும் இடைக்கிடை சிலசிறிய சம்பவங்கள் மாத்திரமே இடம்பெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

## "சோவியத் நாட்டில் 30 மொழிகளில் பாரதியாரின் ஆக்கங்கள்"

(கொழும்பு)

''சோவியத் நாட்டில் எழுபது மொழிகள் இருக்கின்றன. அவற்றில் முப்பது மொழிகளில் பாரதியார் பற்றிய ஆய்வுகள், ஆக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன. பாரதியார் கவிதை 5 லட்சம் பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன எழுபது மொழிகளிலும் பாரதியார் பற்றி இடம்பெற ஆவன செய்யப்போகிறேன்.''

இவ்வாறு சோவியத் கவிஞர் அனடொலி பார்பரா, கொழும்பில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் குறிப்பிட்டார். சோவியத் நாட்டிலிருந்து அனடொலி பார்பரா, லியா செஸ்லேவ் ஆகிய இரு கவிஞர்களும் தற்போது இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் பாரதியின் ஆக்கங்கள் மீது ஈடுபாடு கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தவிருந்துபசாரம் தமிழ், இந்துசமயகலாசார அமைச்சர் திரு. பி பி. தேவராஜ் முயற்சியினுல் நடைபெற்றது. விழாவில் திரு. பிரேம்ஜி, திரு. செ. கணேசலிங்கம், பேராசிரியர் உவைஸ் கவிஞர் திரு. க. கே. கணேஷ் தினகரன் ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் ஆகியோரும் பங்குபற்றினர். (ம)

## மேலிடத்துக்கு புகார் செய்யப்படுவதை பொறுக்காமல் தற்கொலை!

(காங்கேசன்துறை)

தாம் பொறுப்பெடுத்துச் செய்த புனரமைப்பு வேலைகள் சரியில்லையென மேலிடத்துக்கு புகார் செய்யப்படுவதைத் தாங்கமுடியாது மனம்நொந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மல்லாகத்தைச் சேர்ந்தவரும், ஏழாலை பிரதேசபை அலுவலகத்தில் பணிபுரிந்தவருமான நடராஜா சிவலிங்கஜோதி (48வயது) என்பருக்கே ஆக்கதி நேர்ந்தது.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்திய சமயம் காலஞ்சென்றவரின் மனைவி சரோஜாதேவி சாட்சியமளிக்கையில்; அரசாங்க கொந்தராத்து வேலைகள் சிலவற்றை காலஞ்சென்றவர் செய்துவந்தாரெனவும், அவைசரியில்லையென்றும் மேலிடத்துக்குப் புகார் செய்யப்பட்டதாகவும் அவரது சகாக்கள் கூறியதையடுத்து மனம்நொந்து காணப்பட்டாரென்றும் சம்பவதினம் காலை பிள்ளைகளைப் பாடசாலைக்கு கொண்டு சென்றுவிட்டு திரும்பிவந்தபோது நஞ்சருந்தியிருந்தாரெனவும் கூறினர்.

வைத்திய அதிகாரி திரு. சத்தியசீலன் பிரேத பரிசோதனை நடத்தி நஞ்சருந்தியதால் மரணம் ஏற்பட்டதாக தெரிவித்தார்.

இறுதியில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (86)

## பங்களாதேஷில் 18 ஆயிரம் வைத்தியர் வேலை நிறுத்தம் வைத்தியசேவை ஸ்தம்பிதம்

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் டாக்டர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தினுல் வைத்தியசேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

தமது பல கோரிக்கைகளை முன்வைத்து சுமார் 18,000 டாக்டர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். சம்பள உயர்வு, போதிய அலவன்ஸ், வேலையற்றிருக்கும் வைத்திய பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு என்ற மூன்று கோரிக்கைகளுமே அங்கு முன்வைக்கப்பட்டன.

தமது இக்கோரிக்கைகளை நிறைவேற்ற அரசுக்கு குறிப்பிட்ட கால அவகாசத்தையும் வழங்கியுள்ளனர். இவை நிராகரிக்கப்படும் பட்சத்தில் தாம் தொடர்ச்சியானவேலை நிறுத்த நடவடிக்கையில் இறங்க வேண்டியிருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வைத்தியர்களின் வேலைநிறுத்தத்தால் நாட்டில் சுமார் 30 பேர் வரை இறந்துள்ளதாக அரசுக்குறிப்பொன்று தெரிவித்துள்ளது. (சி)

## கருணாநிதி மீது அவதூறு சேதப்பட்டி முத்தையா கைது

(சென்னை)

அண்ணா தி. மு. க. லோக்சபா தலைவர் திரு. சேதப்பட்டி முத்தையா, முதல்வர் கருணாநிதிக்கு எதிராக பொய்ப் பிரசார முயற்சியில் ஈடுபட்டதற்கான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவை கொலைசெய்ய முதல்வர் முயற்சிகளை மேற்கொண்டதாக அவருக்கு எதிராக சுவரொட்டிகளை தயாரித்தபோதே திரு. முத்தையா பொலிஸாரினுல் கைதுசெய்யப்பட்டார்.

கடந்தமாதம் 24-ம் திகதி செல்வி ஜெயலலிதா பயணம் செய்தகார் லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதையடுத்தே அவரை கொலை செய்ய தி. மு. க. வினர் முயற்சித்ததாக அ. தி. மு. க. வினர் பரவலாகக் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதனை வன்மையாக மறுத்த முதல்வர் திரு. கருணாநிதியும், தி. மு. க. வினரும் தமக்கு எதிராக பொய்ப்பிரசாரங்களை மேற்கொள்வோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தனர்.

இதேவேளை மேற்படி விபத்தால் செல்வி ஜெயலலிதாவின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து பல மாதங்கள் இவர் சிகிச்சை பெறவேண்டியிருக்கும் என்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர் (சி)

## யாழ். தொழிற்சாலையில் செயற்கை கைகளும் தயாரிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஊனமுற்றவர்களுக்கான கால்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை தற்பொழுது செயற்கைக் கைகள் தயாரிக்கும் தொழிலையும் இளம்பிள்ளைவாத நோயினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கான சப்பாத்துக்களை தயாரிக்கும் தொழில்களையும் ஆரம்பித்துள்ளது.

இதுவரைக்கும் முந்நூற்றிப்பதினுறு பேருக்கு செயற்கைக் கால்களை பொருத்திய இத்தொழிற்சாலை தற்பொழுது பதின்மூன்று பேருக்கு செயற்கைகளையும் பொருத்தியுள்ளது.

இக் கைகளால் பொருள்களை எடுக்கக்கூடிய முறையில் இயங்கும் அளவிற்கான தொழில் நுட்பத்திறமையில் செயற்கைக் கைகளை தயாரிக்கின்றனர்.

மேலும்முழுமையாக நடக்க முடியாதவர்களுக்கு மூன்று சில்லுச் சைக்கிள் வண்டிகள் தயாரிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளனர். இன்னும் ஊனமுற்றவர்களுக்கானவெவ்வேறு வகையான வண்டிகளை புதிய முறையில் தாம் தயாரிக்கத்திட்டமிட்டுள்ளதாக இத்தொழிற்சாலை முகாமையாளர் தெரிவித்தார். (56)

ஆட்சியைகவிழ்க்க முயன்றதாக

# மாகாணமுதல்வர்பதவிநீக்கம்

# பிலிப்பைன்ஸில் கடும்சண்டை

20 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸில் பதவிநீக்கம் செய்யப்பட்ட மாகாண முதல்வர் ஒருவரின் ஆதரவாளர்களுக்கும் இராணுவத்திற்குமிடையில் நடந்த கடும் மோதலில்சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மாகாண கவர்ணர் திரு. ருதல்போ அக்கினுல்டோ கடந்த வருட பிற்பகுதியில் நமதுஆட்சியைக் கவிழ்க்க சதி செய்ததாக குற்றம்சாட்டி அதுபர் திருமதி அக்கினோ அவரை பதவி நீக்கியதுடன் கைது செய்து சிறையிலும் அடைத்துள்ளார்.

இதையடுத்து இவரது ஆதரவாளர்கள் கடந்த சில மாதங்களாக அரசுவிரோத ஆர்ப்பாட்டங்கள் பலவற்றில் ஈடுபட்டுவந்தனர். இவர்களை பாதுகாப்பு படையினர் கைது செய்து சிறையிலடைத்தனர். இதன் மூலம் வன்முறை பல இடங்களிற்கும் பரவியது.

இதன் ஒரு கட்டமாகவே நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் பலத்த சண்டை ஏற்பட்டது. இதில் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட இதுபதுபேர் வரை கொல்லப்பட்டனர். தற்போது மணிலாவின் சில பகுதிகளில் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## பொதுக் கூட்டம்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை டலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 11-ம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் இந்த ஆண்டின மொத்தக்கடன் எல்லை, இந்த ஆண்டின் உத்தேச வரவு செலவுத் திட்டம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்பட உள்ளது. (86)

### பணிவாக்கு

''விருந்தினர்க்கு உணவளிக்காமல் தான் முன்னர் உண்ணல் ஆகாது. விருந்தோம்புதலால் பொருளும், புகழும் ஆயுளும் நற்கீர்த்தியும் கிடைக்கின்றன.

... மநுதர்ம நீதி.

## நமது நோக்கு

# ஆசிரியர் பயிலுநர் தெரிவு

அண்மையில் ஆசிரியர் பயிலுநர் தெரிவுநடைபெற்றது. பரீட்சைகள் நடாத்தி, நேர்முகத்தேர்வுகள் நடாத்தி இத்தெரிவு நடைபெற்றது.

ஆண்டுகள் சிலவற்றிற்கு முன் நடைபெற்ற தெரிவுகளில் கல்வித்தகைமைகள் அல்லாத வேறு 'செல்வாக்குத்' தகைமைகளும் இடம் பெற்றதாகப் புகார்கள் கூறப்பட்டன.

எனவே, இம்முறை தெரிவு நடாத்தப்பட்டபோது பரீட்சை நேர்முகத் தேர்விற் புதிய புள்ளியிடும் முறை, குறைபாடுகளை மீளாய்வு செய்யக்குழு அமைத்தல்போன்ற பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

புகார்கள் கிடைப்பதைக் குறைப்பதற்கான பல வழிமுறைகள் செய்யப்பட்டன என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

ஆனால், பட்டியல் வெளியானதும் பலரது குமுறல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

வேலை கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் பல தீவிரக் கண்டனங்கள் வெளிப்படுத்தும் என்பதை நாமறியாமலில்லை.

ஆனால், எல்லாப்புகார்களையும் அப்படித் தட்டிக் கழித்துவிட முடியுமா?

நேர்முகத் தேர்வு பல மட்டங்களிலே, பல பிரதேசங்களிலே நடைபெற்றன. புள்ளியிடும் முறையிலே, அதாவது சில சான்றிதழ்களை ஏற்பதில் எடுத்த தீர்மானங்களிலே வேறுபாடுகள் இருந்ததாகப் புகார்கள் வந்துள்ளன. இது விசாரணைக்குரிய விஷயம்.

போலிச்சான்றிதழ்கள் பற்றியும் பரவலான கண்டனம் உண்டு. இந்த நேர்முகத் தேர்வுக்கு மாத்திரமல்ல, ஏனைய தொழில்களுக்கும் ஆட்சேர்ப்புநடைபெறும்போது, போலிச் சான்றிதழ் சமர்ப்பிக்சப்படுவதைத் தடுக்க, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

கண்டனங்கள் பல வெளிவருவதை, நாட்டின் வேலையில்லாப் பிரச்சனை என்ற வியாதியின் ஒரு அறிகுறியாகவே நாம் கருதுகிறோம். இந்த வியாதி, எமது அடிப்படைப் பொருளாதாரச் சீர் கேட்டின் விளைவு.

அரசியல் அமைதியும், பொருளாதாரத்தில்வளர்ச்சியும் பெற்ற நாடுகளிலேயே இந்த வியாதிபொருளாதார வைத்தியர்களைத் திணறடிக்கின்றது.

மாற்றுந்தாய் மனப்பான்மை, தரப்படுத்தல், தொழில் வளர்ச்சியின்மை, உள்ளவளங்களின் உச்சப் பயன்பாடின்மை போன்ற பல்வேறு காரணங்களால் எமதுபிரதேசங்களில் வேலைவாய்ப்பின்மை சமூகத்திலே வேதனை ஏற்படுத்தும்முதற்காரணியாகின்றது.

எனவே, ஆட்சேர்ப்பு நடைபெறும்போது, பல்லாயிரக்கணக்கானோர் விண்ணப்பித்துவிட்டு முடிவுகளிலே ஏமாற்றம் அடையும் போது கண்டனங்கள் கிளம்புவது தவிர்க்கமுடியாதது தான்.

பொருளாதாரத்தைச் சீர்செய்து, வேதனைகளைக் குறைக்க நடவடிக்கைகளை எடுப்பதற்குக்கால அவகாசம் தேவைப்படலாம்.

ஆனால், இடையிலே, புகார்கள் இல்லாமல்தெரிவுகள் நடைபெற மேலும் கண்காணிப்பு அவசியம். புகார்களை மீளாய்வுசெய்து உண்மையான மனக்குறைகளைக் குறைக்க, தவறுகள் இடம் பெற்றிருந்தால் அவற்றைச்சீர்செய்யஆவன செய்யவேண்டும் என்பதே எமது கருத்து.

## தவக்கால நற்சிந்தனை

### செபம்

''உமது திருவுளம்விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக' என்று செபியுங்கள் என்றார் யேசு. இறைவன் எம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதமாக அறிந்திருக்கிறார். அவர் எமக்குத் தந்த ஆற்றல்கள் திறமைகள் எமது பெலவீனங்கள் யாவற்றையும்அவர் அறிந்ததே, எம் ஒவ்வொருவருக்கும் தான் அமைத்த தனிப்பட்ட திட்டத்திற்கேற்ப எம்மை வழிநடத்திக்கொண்டு செல்கிறார். எனவே நாம் எங்கே தவறுவோம் என அவர் அறிந்திருக்கின்றபடியால் நாம் கேடபவை யாவற்றையும் அவர் தருவதில்லை. எனவே நாம் மனம் சோர்ந்துவிடக் கூடாது. எம்முடைய செபம். உமது சித்தப்படியே ஆகட்டும் என்று அமையவேண்டும். நாம் கேட்பதை அவர் தந்தாலும், தராமல் விட்டாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மன வலிமையை உருவாக்கிக் கொள்ளவேண்டும். ஏனெனில் எமக்கு எது தேவை, எது தேவையில்லை என்று அவருக்குத்தெரியும். எமக்கு அவர் வகுத்துள்ள தனிப்பட்ட திட்டப்படி எம்மை அவர் வழி நடத்திச்செல்வதற்கு எம்மையும் எமக்கு அவர்தந்த யாவற்றையும் அவர்கையில் ஒப்படைத்துவாழக்கற்றுக்கொள்ள வேண்டும். எனவே இறைமகன் யேசு கற்றுத்தந்ததுபோல தந்தையின் திருவுளம் எம் ஒவ்வொருவரிலும் நிறைவேறும்படி சிறப்பாக இக்காலத்தில் செபிப்போம்.

அருட்திரு அன்ரனி பாலா

# நந்தியின் 'நம்பிக்கைகள்' இன்று வெளியீடு

செல்வி வாசுகி சொக்கலிங்கம்

நந்தியைத் தமிழ் இலக்கிய உலகைய அறியாதிருக்க முடியாது. 'சஞ்சலமும் சந்தோஷமும்' என்ற சிறுகதையுடன் இலக்கிய உலகுக்கு அறிமுகமான நந்தி இன்று எழுபத்தைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், மருத்துவம் சார்ந்த அறிவியல் நூல் என்பவற்றினை எழுதியுள்ளார். இவர் ஒரு சிறந்த இலக்கிய விமர்சகர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நந்தி பல துறைகளிலும் தமது கவனத்தைச் செலுத்தியபோதும் இவரது முழுமையான ஆற்றலையும் ஆளுமையையும் இவரது சிறுகதைகளிலும் நாவல்களிலுமே நன்கு காணமுடியும்.

மலைக்கொழுந்து, தங்கச்சி அம்மா ஆகிய இவரது இரு நாவல்களிலிருந்தும் வேறுபட்ட பகைப்புலத்தில் இவரது மூன்றாவது நாவலாகிய 'நம்பிக்கைகள்' அமைந்திருத்தல் காணலாம். இந்த நாவலினூடாக நந்தியின் சமூக நுண்பார்வை பரந்த ஒரு பிரதேசத்திலுள்ள சமூகங்களிடையே படிந்துள்ளமை புரியும். இவர் கிராமத்தில் சில காலம் வாழ்ந்தமையும் மருத்துவர் என்ற முறையில் கொழும்பு மேல்தட்டு வர்க்கத்தினரோடு ஏற்பட்ட தொடர்பும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூக மருத்துவப் பேராசிரியராக விளங்கியமையும் இவரது பரந்துபட்ட பார்வைக்கு ஒரு வகையில் உறுதுணை செய்துள்ளன, தமக்குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு வேறுபட்ட பல சமூகங்களினதும் ஏற்ற இறக்கங்களையும் அவலங்களையும் நந்தி 'நம்பிக்கைகளூடாகக் கலையுணர்வுடனும் சமூகப்பிரக்ஞையுடனும் சித்தரித்துள்ளார்.

எமது சமூகத்தின் குருதியில் ஊறிப்போன சாதிமுரண்பாடுகளினால் ஏற்படும் பிரச்சினைகள் அவற்றின் முழுமையான பரிமாணத்துடனும் சமூகப்பொறுப்புடனும் இந்த நாவலில் சித்தரிக்கப்படுகின்றன. அதே வேளையில் பொருளதார முரண்பாடுகளால் சமூகமட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஏற்படும் காத்திரமான பிரச்சினைகளும் எடுத்துக் காட்டப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட முரண்பாடுகளிடையே கிராமத்தில் வாழ்ந்த இளைஞன் கொழும்பு மேல்தட்டு வர்க்கதின் போலியான பகட்டான வாழ்வுடன் தன்னை இணைத்துக்கொள்ள நேர்ந்தபோது ஏற்படும் பிரச்சனைகளை அவனது சூழலில் வைத்து நந்தி ஆராய்நதுள்ளார். இதுவே கதை வளர்ச்சிக்குத் துணையாவது இங்கு குறிப்பிடத்தக்கது மேலும் மேல்தட்டு வர்க்கத்தின் வாழ்க்கைச் சீர்கேடுகளும் அவற்றால் ஏற்படும் அவலங்களை மறைத்து வாழும் போலித்தனமான வாழ்கையும் இந்நாவலில் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளன.

பொதுவாகச் சமூகங்கள் எதிர்நோக்கும் கல்வி, இன, மருத்துவ நம்பிக்கைகள் சார்ந்த பிரச்சனைகளும் அவற்றின் மூலம் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களும் நம்பிக்கைளில் எடுத்துக்காட்டப்படுகின்றன. நந்தி மருத்துவராக விளங்கியமையால் மருத்துவம் தொடர்பான பல்வேறு மட்டங்களிலும் தோன்றும் பல்வேறு பிரச்சனைகளையும் அவற்றின் தீவிரத்தன்மையையும் தமது நாவலில் கதைக்கு ஊறுவிளைவிக்காதவகையில் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடக்தக்கது. இது தமிழ்நாட்டெழுத்தாளர்களாகிய லக்ஷ்மி போன்றவர்களிடம் கூட இல்லாத சிறப்பான அம்சமெனலாம்.

மேலும் சமூகப் பிரக்ஞையுடைய எந்த எழுத்தாளனும் சமூகத்தின் வளர்சசிக்குரிய தனது கருத்துக்களை, ஆலோசனைகளை எடுத்துக கூறத் தவறமாட்டான். இந்த வகையில் நந்தியும் தமது நாவலில் தமது கதை மாந்தரூடாகச் சமூக முன்னேற்றப் பணிகளின் செயல் ரூபங்களையும் அவற்றின் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறார் சமூகப்பணிகளில் நந்தி கொண்ட ஆர்வம் இவரது கதைமாந்தர் சிலரின் தனி மனித உணர்வுகளை மறைத்து இலட்சியவாதப் போக்குடையவராகக் காட்ட முற்பட்டபோதும், ஏனைய முக்கிய பாத்திரங்களது பாத்திர வார்ப்பும் கதையின் நோக்கும் அமைப்பும் நந்தியை ஒரு எதார்த்தவாதியாக இனங்காட்டுகின்றன.

''நம்பிக்கைகளை' முழுமையாக நோக்கின் இந்த நாவலின் பல்வேறு சமூகங்களினது பல்வேறு பிரச்சினைகளை அச்சமூகங்களின் சூழலில் வைத்துச் சித்தரித்துள்ளமை நன்கு தெளிவாகும. எதார்த்தவாதம் என்னும் சொல்லுக்குப் பலர் பல கருத்துக்களை வழங்கியபோதும் 'எதார்த்தவாதம் என்பது சமூக ஆய்வு' என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக உள்ளது. இதனடிப்படையில் நந்தியின் நாவலும் எதார்த்தவாதப் போககிலிருந்து விலகாத சமூக ஆய்வாக விளங்குவதை நன்கு அவதானிக்கலாம்.

'நம்பிக்கைகள்' ஈழத்து நாவல் வரலாற்றில் ஒரு மைல்கல் என்பதை அதனை வாசிப்பவர் நிச்சயம் ஏற்பர்.

## மக்கள் கருத்து

### ஏன் தமிழில் இல்லை?

தங்களின் 13-02-1990 அன்று ஆசிரிய தலையங்கத்தில் 'கேட்டு வாங்குங்கள்'' என தமிழ் மொழி அமுலாக்கம் பற்றி எழுதியுள்ளீர்கள். இதுவிடயத்தில் நாம் ஒன்றை மிகக்கவனமாக சிந்தித்தல்வேண்டும் எங்கள் சிந்தனை முழுவதும் சிங்களத்தை எதிர்ப்பதாக இருக்கின்றதே தவிர தமிழில் செயலாற்ற வேண்டும் என்பதாக இல்லை. நாம என்ன செய்கிறோம்? ஆங்கிலம்; ஆங்கிலம்: எதிலும் எங்கும் ஆங்கிலம். கேவலம் 10லட்சத்துக்கு மேல் தமிழர் வாழும் குடா நாட்டில் தமிழில் கையொப்பம் வைப்பவர்கள் எத்தனை பேர்? வடக்கு கிழக்கிலுள்ள காரியாலயங்களில் அலுவல்கள் ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன.

படிவங்களை தமிழில் கேட்டுப் பெறுங்கள் என்று கூறினீர்கள், வடக்கு கிழக்கிலுள்ள மாவட்டக் காரியாலயங்சள் தாங்களே ஆக்கும் படிவங்களையோ ரோணியோ படிவங்களை எல்லாம தமிழிலேயா ஆக்குகின்றன? இல்லை முடிந்தளவு ஆங்கிலத்திலேயே தயாரித்துவருகின்றன.

அண்மையில் முற்றுமுழுதாக சிங்களத்திலேயே கடமைகளைச் செய்யும் (தாய்மொழிப் பற்றுமிக்க) கொழும்பில் உள்ள தலைமையகம் ஒன்றிலிருந்து வடக்கு கிழக்கில் உள்ள கிளைக் காரியாலயங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த விடயம் இதுதான்:

(5ம் பக்கம் பார்க்க)

### களஞ்சியத்தில் ஆடைகள்

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஆண்டு ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக 20 கோடி ரூபா பெறுமதியான தைத்த ஆடைகள் ஏற்றுமதிசெய்யப்படாமல் களஞ்சியங்களில் தேங்கிக் கிடககின்றன என்று இலங்கைத் தேசிய ஏற்றுமதியாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

ஒப்பந்தப்படி குறித்தகாலத்துக்கு இவை ஏற்றுமதிசெய்யப்படாததினால் இதே போன்ற பெருமளவிலான ஓடர்கள் வெளிநாடுகளிலிருந்து தொடர்ந்து கிடைப்பது சந்தேகமே என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலதும் பத்தும்

### எண்ணைப் போர் ஓய்ந்தது

'பாம்' எண்ணை (Palm Oil) தேங்காய் எண்ணை ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடல்லவா மலேசியா?

அமெரிக்காவில் உற்பத்தியாகும் சோயா எண்ணைக்கு இவை போட்டியாயின!

வணிகப்போர் தொடங்கியது. போராயுதம் என்ன? பிரசாரம் தான்!

போர் 'இருதயத்தை'யே தொட்டது......! அதாவது; இருதய வியாதிக்கு மலேசியா ஏற்றுமதிசெய்யும எண்ணை வகைகள் ஆபத்தானவை. எப்படி? அவற்றில் உள்ள கொழுப்புச்சத்து - 'கொலஸ்ரல்' அளவு - அதிகமானவை. எனவே இறக்குமதி செய்யும் அந்த எண்ணைகளுக்கு எச்சரிக்கை லேபல் ஒட்டவேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

கோரிக்கை விட்டவர்கள் யார்? அமெரிக்க சோயா எண்ணை உற்பத்திச் சங்கத்தினர்!

மலேசியா சளைக்கவில்லை ''சோயா எண்ணையில் கொலஸ்ரல் அளவு குறைவு தான் ஆனால் என்ன நடக்கிறது? அதனை ருசியாக்குவதற்கு ஐதரச 'அணுவேற்றம்' (Hydrogenation) செய்யப்படுவதால் அதன் 'கொலஸ்ரல்' அளவு மிகமிக அதிகரிக்கிறதே!'' - இப்படி மலேசியக் கைத்தொழில் அமைச்சரே 'புட்டுக்'காட்டினார்.

அதுமாத்திரமா? அமெரிக்க விஞ்ஞானிகள் நடாத்திய ஆய்விலும பாம் எண்ணை கொலஸ்ரலைக் குறைக்க உதவும் எனவும், 'கான்சர்' வியாதியைக் குறைக்க உதவும் எனவும் ஒரு அறிக்கையை வெளியிட்டது.

அமெரிக்க வணிகர்கள்...... பெட்டிப் பாம்பாயினர்! சர்வதேச வர்த்தகத்திலும் தான் எத்தனை தில்லுமுல்லுகள்?

வாணி

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** எனக்கு இரண்டு ஏக்கர் வயல் காணி உண்டு. கடந்த மழையினுல் அறுவடை செய்யப் போகும் நேரம், பலத்த மழை பெய்து அழிவுஏற்பட்டு விட்டது இந்த அழிவுக்குரிய நட்டங்களுக்கு நிவாரணம் பெறலாமா?

பி. சதாசிவம், ஆனைக்கோட்டை.

**பதில்:** நீங்கள் நிவாரணம் பெறுவதற்கு, பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்திருக்க வேண்டும். செய்யாதுபோனுல் நிவாரணம் பெறமுடியாது. உங்கள் அழிவை ஏழுநாளைக்குள் கமநலச் சேவை ஒவசியரிடம் சென்று எல். என். ஆர். பத்திரத்தில் எழுதிக்கொடுத்திருந்தால், இனிமேல் கமநலச்சேவை. அதிகாரிகள் வந்து பார்வையிட்டு உங்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை மதிப்பிட்டு நிவாரணங்கள் தரலாம்.

## சந்தைப் பாவனையில் நிறை குறைந்த படிகள் முத்திரையிட பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீன் சந்தை மரக்கறிச்சந்தைகளில் நிறைகுறைவான கிலோ படிகள் பாவனையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படிகளை உடனடியாக யாழ்ப்பாண செயலக நிறுத்தல் அளத்தல் திணைக்களத்தில் கொண்டு சென்று முத்திரையிடுமாறு யாழ்ப்பாணம் கிளிநொச்சி நிறுத்தல் அளத்தல் பொறுப்பதிகாரி திரு. கே. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தகவல் தருகையில்; யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதியிலுள்ள வர்த்தகர்கள் தமது நிறுத்தல் அளத்தல் கருவிகளை யாழ்ப்பாண செயலகத்தில்தான் முத்திரையிட வேண்டும்.

இம்மாதம் பன்னிரண்டாம் திகதி முதல் பதினைும் திகதி வரை பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில நிறுத்தல் அளவைகள் முத்திரையிடும் பணி திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இம்மாதம் இருபத்தோராம் திகதி முதல் முப்பத்தோராம் திகதிவரை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் திணைக்களத்தால் முத்திரையிடும் பணி நடைபெறும் என்ருர். (12)

## செய்முறை வகுப்பு ஒத்திவைப்பு

(நாவற்குழி)

இம்மாதம் 17ம், 18ம் திகதிகளில் நடைபெறவிருந்த 89/91ம் ஆண்டிற்குரிய தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சியாளர்களுக்கான செய்முறை வகுப்பு இம்மாதம் 24ம், 25ம் திகதிகளுக்குப் பின்போடப்பட்டுள்ளது.

கடந்த வகுப்புகளில் தங்களுக்குரிய மொடியூல்ஸ்களை எடுக்காத பயிற்சியாளர்கள் வெள்ளிக்கிழமைகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் பெற்றுக கொள்ளலாம். (107)

## வீதிக்கு 'ரியூப்லைட்'

(கோப்பாய்)

கோப்பாய் உப அபிவிருத்திச் சபைக்கு உட்பட்ட பகுதியில் மின் விளக்குக் கம்பங்களில் சாதாரண மின் குமிழ்களுக்குப் பதிலாக 'ரியூப்லைட்' பொருத்தப்பட்டு வருகின்றது ஏறக்குறைய இப்பணி பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

## ஏன் தமிழில் இல்லை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

''வடக்கு கிழக்கில் தமிழில் கடமையாற்ற வசதி செய்யப்பட்டிருந்தும்தங்கள் அலுவலகக்கடமைகள்தமிழ் அல்லாத ஒரு மொழியில் செய்யப்படுகிறதாக அறிகிறேன். தமிழில் கடமையாற்ற முடியாதிருப்பதற்கான காரணம் என்ன என்பதை அறியத்தரவும்''

[இதில் தமிழ் அல்லாத ஒரு மொழியென குறிப்பிடப்பட்டிருப்பது ஆங்கிலத்தையே]

இதற்கு முழுவதும் தமிழர்களே கடமைபுரியும் ஒரு அலுவலகத்தில் இருந்து அந்த சிங்கள அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட பதில் ''ஆங்கில பதங்களுக்கான தமிழ்ப் பதங்களைக்கொண்ட அகராதி ஒன்று அனுப்பிவைக்கவும்'' எப்படி இருக்கிறது.

கலாநிதி மு. வரதராசனுரின் கருத்தொன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ''நான் சர்வாதிகாரியானுல் தமிழ்நாட்டில் எல்லா அலுவல்களும் தமிழிலேயே நடைபெறவேண்டும். யாவரும் தமிழிலேயே ஒப்படமிடவேண்டும் தமிழககவர்ணர் கூட தமிழிலேயேஒப்பமிட வேண்டும்என சட்டமாக்குவேன்''.

இன்றைய தலைமுறையினர் இதில் தலையிடுவார்களா? ஒரு திகதியைக் குறிப்பிட்டு அன்று முதல் சகல அலுவல்களும் தமிழிலேயே நடைபெற வேண்டும் என கட்டளையிட மாட்டார்களா?

ந. சதாசிவ ஐயர்
திருநெல்வேலி.

## வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் நேற்று இடம் பெற்ற சைக்கிள் - பஸ்வண்டி விபத்தொன்றில் வயோதிபர் ஒருபர் படுகாயமடைந்தார்.

நீர்வேலியைச் சேர்ந்த பெரியதம்பி நடராசா (வயது 65) என்ற வயோதிபரே படுகாயமடைந்தவராவார்.

வாழைக்குலைகளைக் கட்டிக் கொண்டு இவர் சைக்கிளில் வந்தபோது வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டி ஒன்று இவரை அடித்துவீழ்த்தியதால் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## சனசமூகநிலையங்கள்தான் மக்களின் உயிர்நாடிகள்

(யாழ்ப்பாணம்)

''சனசமூக நிலையங்கள் தான் மக்களின்உயிர்நாடிகள். எனவே அவை முழுமையாக செயற்படாவிடின் அதனுல் பாதிப்படைபவர்கள் மக்களேயாகும்.'' என்று யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் திரு. இ. தவகோபால் தெரிவித்தார்.

கொட்டடி சனசமூக நிலையத்தின் ஆரம்ப விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினுர்.

திரு. சி. எம். செல்லப்பா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. தவகோபால் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''எமக்குச் கிடைத்திருக்கும் வெளிநாட்டுஉதவிகளை எமது குடா நாட்டிலுள்ள சனசமூக நிலையங்கள் பூரணமாக இயங்காமையால் வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறோம்.

யாழ். குடாநாட்டில் மொத்தமாக 804 சனசமூகநிலையங்கள் இருந்தும் அவற்றில் 514 நிலையங்களே இயங்குகின்றன. அவற்றினுள் நூல்கள் இரவல் வழங்கும்பகுதிகளைக்கொண்ட நிலையங்கள் 134 மட்டுமே இயங்குகின்றன.

ஏசியன் பவுண்டேசன் நிறுவனத்தினர்250 தொகுதி புத்தகங்களை வழங்க முன்வந்தும் போதிய நூல் இரவல் வழங்கும் நிலையங்கள் இல்லாமையால் அவற்றை எம்மால்பெற முடியாதுள்ளது.

சனசமூகநிலையம் மேலோங்க மக்கள் யாவரும் பார்வையாளர்களாக மட்டும் இருப்பதை விடுத்து பங்காளிகளாகி தங்களுக்கு கிடைக்கவேண்டிய எல்லா வெளிநாட்டு உள்நாட்டு உதவிகளையும் பெற வேண்டும்.''

முன்னுள யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. சோ. சிவரெத்தினம், யாழ். வர்த்தக சங்கச் செயலாளர் திரு. சி நமசிவாயம் ஆகியோரும் உரையாற்றினுர்கள். (து)

## அகில இலங்கை ரீதியில் சுவரொட்டி போட்டி

(உடுவில்)

போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது சம்பந்தமாக அகில இலங்கைச் சுவரொட்டிப் போட்டியொன்றை நடத்த கல்வி அமைச்சின் பாடசாலைத் தொழிற்பாடுகள் கிளை தீர்மானித்துள்ளது.

போதை பொருள்களிலிருந்து விடுபட்டு பொறுப்புள்ள ஆரோக்கியமான வாழ்க்கையைநடத்துவதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதன் பொருட்டு நடத்தப்படும் இப்போட்டியில் க. பொ. த. சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்குபற்றலாம்.

மாகாண ரீதியிலான போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு தலா 1500, 1000, 500 ரூபா பணப்பரிசும், சிறப்புத்திறமைச்சான்றிதழ்களும், 4 முதல் 10 வரை சிறப்புத் திறமைச்சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

அகில இலங்கைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களுக்கும் முறையே 5000, 3000, 2000 ரூபா பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும். 4 முதல் 10 வரையான இடங்களுக்கு தலா ஆயிரம் ரூபா ரொக்கப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும். (109)

## இப்படியும் நடக்கிறது

"தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினிலே குறைவதுண்டோ... உன் அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அன்பில் குறைவதுண்டோ..." என்று ஒரு திரைப்படப்பாடல் உண்டு.

ஒரு காலத்தில் 'ஓகோ' என்று ஒலித்த இப்பாடலில் ஏராளமான கருத்துக்கள் உண்டு. இதேமாதிரியான நிலைதான் ஓர் மாணவிக்கும் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆசிரிய பயிலுநராக விண்ணப்பித்த இம்மாணவி; அங்கவீனர் என்ற ஒரே காரணத்துக்காக நேர்முகப்பரீட்சையில் விலக்கப்பட்டுள்ளார்!

ஜி. ஸி. ஈ. (சாதாரணதரம்) பரீட்சையில் எட்டுப் பாடங்களில் சித்தியடைந்த இம்மாணவி வட இலங்கை சங்கீதசபையின் நான்காவது ஆண்டுப் பரீட்சையிலும் சித்திபெற்றவர்.

நேர்முகப்பரீட்சையில் விலக்கப்பட்ட இம்மாணவி தனது பரிதாபத்தை மேன்முறையீடு செய்யச் சென்ற போதும் 'கதவு' திறக்கப்படவில்லை!

அரசாங்க நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை 27/88ன் பிரகாரம் சகல திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் நியமனம் வழங்கப்படும்போது மூன்று வீத வெற்றிடங்கள் அங்கவீனர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐந்தாவது வயதில் ஒருகாலை இழந்து, செயற்கைக் கால் பொருத்திய மேற்படி மாணவி, ஆசிரியர் பயிலுநர் பரீட்சையில் விலக்கப்பட்டார் என்ருல் அவருக்கு கல்வியே கற்பிக்காமல் பாடசாலையிலிருந்து அன்றே விலக்கியிருக்கவேண்டும்!

இந்தப்புறக்கணிப்பு மனிதாபிமானமுள்ளதாகத் தெரியவில்லை!

''ஊடுருவி''

## நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரையிட மன்னுரில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மன்னுர் மாவட்டத்தில் பாவனைக்கிருக்கும் நிறுத்தல் அளவைகள் கருவிகளை முத்திரையிடும்பணி இம்மாதம் பன்னிரெண்டாம் திகதிமுதல் பதினைந்தாம் திகதி வரை மன்னுர் செயலகத்தில் நடைபெறுமென இதற்குப்பொறுப்பான அளவை நிறுவைப் பரிசோதகர் திரு. வி. கிருஸ்ணதாசன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் தருகையில்; சகல வர்த்தகர்களும் குறிப்பிட்டதினத்தில் தமது கிலோ படிகளையும் மற்றும் அளத்தல் கருவிகளையும் எடுத்துவந்து இவ்வாண்டுக்கான முத்திரையை இடும்படி அவர் கோரியுள்ளார். குறிப்பிட்ட தினங்களில் முத்திரையிடாத வர்த்தகர்களது நிறுத்தல் அளத்தல் கருவிகள் பரிசீலிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று அவர் தெரிவித்தார். (12)

## நகைக்கடை நிறுத்தல் அளவைகளை பரிசீலனை செய்ய கருவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள நகைக்கடைகளில் பாவனையிலுள்ள நிறுத்தல் அளவைகளை பரிசீலனை செய்வதற்கு நிறுத்தல் அளவைகள் திணைக்களம் எட்டுலட்சம் ரூபா பெறுமதியான எலெக்ரோணிக் கருவி ஒன்றை வழங்கியுள்ளது.

இக்கருவியை யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. இக்கருவியை பொருத்துவதற்கு வசதியான இடவசதியொன்றை திணைக்களம் தெரிவுசெய்துவருகின்றது. (12)

## வாகனதிருத்த செலவுகள்

(நெடுந்தீவு)

வன்செயலின் போது பாதிக்கப்பட்டு தமது வாகனங்களை திருத்தம் செய்த சங்கங்களுக்கான உரிய திருத்தக் கொடுப்பனவைப் பெறும் பொருட்டு அதற்கான உறுதிச் சீட்டுக்களை தயாரித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஊடாக உடனே தமக்கு அனுப்பிவைக்கும்படி கூட்டுறவு ஆணையாளர் (வ.கி) கேட்டுள்ளார்.

வாகனங்களுக்கான திருத்தச் செலவு மொத்தமும் நாலாகப் பிரிக்கப்பட்டு காலாண்டுக்கு ஒருதடவை வீதம் பகுதி பகுதியாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஆண்டுச் சஞ்சிகையான 'யாழ்ப்பாணப் புவியியலாளன்' வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை மாலை 3-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழா கழகத் தலைவர் திரு. கே. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும். விழாவினை பேராசிரியர் திரு ஏ. துரைராசா விளக்கேற்றி ஆரம்பித்து உரையாற்றுவார். அறிமுக உரையைப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், வாழ்த்துரையை திரு எஸ். கே பரமேஸ்வரனும் நிகழ்த்துவர்.

சஞ்சிகையை பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் வெளியிட்டு உரையாற்றுவார். [சி]

## வைத்தியசாலை செல்லும் வழியில் மரணமானார்

(காங்கேசன்துறை)

வைத்தியசாலைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றவர் இடைநடுவில் வீழ்ந்து திடீர் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த அரசாங்க ஒப்பந்தகாரரும் பொறியியலாளருமான வைத்திலிங்கம் இரத்தினம்(55வயது) என்பவரே இவ்வாறு மரணமானார்.

ஏற்கனவே இருதய நோய், சலரோகம் போன்றவற்றினால் பீடிக்கப்பட்டிருந்த இவர் சம்பதினம் பல்லுக்கொதி காரணமாக வைத்தியசாலைக்குச் செல்கையில் இடைநடுவில வீழ்ந்து மாரடைப்பால் மரணமானதாக மரண விசாரணையில் தெரியவந்தது.

மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா மாரடைப்பால் ஏற்பட்ட இயற்கை மரணம் எனத்தீர்ப்பு வழங்கினார். (68)

### வீடமைப்பு நன்கொடை 15 ஆயிரம் ரூபா:

## தனியார் நிறுவனம் மூலம் வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் வீடமைப்பு நன்கொடை ரூபா 15,000க்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுடைய வீடுகளை அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் மூலம் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளைப் புனரமைப்பதற்கு நன்கொடை ரூபா 15,000க்கு சிபார்சு செய்யப்பட்டவர்களுடைய வீடுகளை அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள்மூலம் புனரமைப்புச்செய்து அந்த நிறுவனங்களுக்கே ரூபா 15,000 வழங்குவதற்கு யாழ். அரசாங்க செயலக திட்டமிடல் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் விருப்பமான அரசாங்க சார்பற்ற நிறுவனங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (137)

# "அரசியல் நடவடிக்கைக்கு மக்கள் ஆதரவு தேவை"

### மட்டுநகர் கூட்டத்தில் மாத்தயா

(மட்டக்களப்பு)

"ஆரம்ப காலங்களில் இரகசியமான முறைகளில் சிறு குழுவாக தமது நடவடிக்கைகளை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கடந்த 18 வருடங்களின் பின்பு மகத்தான ஓர் மக்கள் சக்தியாக உருமாறி இன்று ஓர் ஜனநாயக அமைப்பாக அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளுமளவிற்கு முன்னேறிவிட்டனர்".

இவ்வாறு நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகரில் வெபர் அரங்கில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் தலைமையில் நடைபெற்ற விடுதலைப்புலிகளின் முதலாவது கூட்டத்தில் உரையாற்றிய திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இன்று ஜனநாயக அரசியலுக்கு நாம் வந்தாலும் எமது விடுதலைப் பலத்தை உறுதி செய்பவர்களாகவே உள்ளோம். இந்நிலையில் எமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் பூரண ஆதரவு எமக்குத் தேவை" என்றார்.

திரு. அன்ரன் பாலசிங்கம் உரையாற்றுகையில்; ஒருவருடத்திற்குமுன் தமிழீழப்பகுதியில் ஒருலட்சம் இந்தியப்படையினர் தமிழ ஈழப்பகுதியை முற்றுகையிட்டு விடுதலைப் புலிகளுடன் மோதினர். ஸ்ரீலங்கா இராணுவமும் ஐந்து தமிழ்க்குழுக்களும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டன. இன்று இந்தியப்படையின் பெரும்பகுதி வெளியேறிவிட்டது. அதனுடன் இணைந்த குழுக்களும் வெளியேறிக கொண்டிருக்கின்றன. பெரும்பாலானவர்கள் எம்மிடம் சரணடைந்துள்ளனர். அவர்களை மன்னித்து விடுதலை செய்து வருகிறோம்" என்றார்,

திருமதி பாலசிங்கம், கவிஞர் காசி ஆனந்தன், திரு. யோகரட்ணம் (யோகி), மக்கள் முன்னணியின் பிரதிச் செயலாளர் செல்வி சுந்தரி உட்படப்பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது, இந்த கூட்டத்தையொட்டி மட்டுநகரே நேற்று முன்தினம் விழாக் கோலம் பூண்டிருந்தது. (க)

## தொலைக்கல்வி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(நாவற்குழி)

தொலைக்கல்விப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கத் தவறிய ஆசிரியர்கள் உடனடியாகத் தங்கள் விண்ணப்பங்களை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பிரதேச தொலைக்கல்வி நிலையத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம் என யாழ். மாவட்ட தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்களும், விபரங்களும் தேவையானோர் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் உள்ள தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும், கடந்த வருடம் கணிதமும், விஞ்ஞானமும் ஒருமித்தபாடநெறியாக இருந்தது என்றும், 90/93ம் ஆண்டுக்கான பயிற்சி நெறிக்கு கணிதம் தனியாகவும், விஞ்ஞானம் தனியாகவும், ஆரம்ப நெறி தனியாகவும் நடைபெறுமெனவும், புதிய ஆசிரிய பயிலுநர்கள் விண்ணப்பிக்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார். (107)

### மாகாண, பொதுத் தேர்தல்

## வேட்பாளர்கள் வசம் 12,500 துப்பாக்கிகள்

(கொழும்பு)

பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்களின்போது வேட்பாளர்களின் பாதுகாப்பிற்கென சுமார் 12,500 துப்பாக்கிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தல்களில் போட்டியிட்ட 1393 வேட்பாளர்களுக்கு தலா 6 மெய்ப்பாது காவலர்கள் என்ற வீதத்தில் அவர்களுக்கு பாதுகாப்பு ஊழியர்கள் அமர்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்டுகின்றது.

இவர்களில் பெரும்பான்மையானோர் வழங்கப்பட்ட ஆயுதங்களை கையளித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## ராசி பலன்

செவ்வாய்க்கிழமை
06 - 03 - 1990

மேடம்:- எதிர்பாராத திருப்பம், கடன்வரவு, மன அமைதி. குடும்பத்தில் குதூகலம், தொழில் லாபம்.

இடபம்:- கடும்போக்கு, வேலைப்பளு, தாய்வழி உதவி, தொழில்குறைவு, குடும்பத்தில் அமைதியின்மை.

மிதுனம்:- பணவகை உறசாகம், அதிகாரம், எதிர்பாராத பயணம், குடும்ப சந்தோஷம், நண்பருதவி

கடகம்;- வாக்கு விரோதம், தொழில்பாதிப்பு, கண்ணியச் குறைவு, பணக்கஷ்டம், மனச்சுமை.

சிங்கம்; கடிதஉறவு, குடும்ப ஒற்றுமை, சகோதரர் உதவி, தொழில்முயற்சி, காரிய அனுகூலம்.

கன்னி:- தொழில்மாற்றம், அதிகாரிகள் தொல்லை, குடும்ப உறவில் சந்தேகம், நல்லோர் சந்திப்பு.

துலாம்:- விரக்திநிலை, கடும்வாதம், பொருள் நஷ்டம், புதிய சிந்தனை அலைச்சல மிகுதி.

விருச்சிகம்:- கவலையான சம்பவம், கடன்படல், தொழில் நஷ்டம், புறம்போக்கு, குடும்பப்பிரிவு

தனுசு:- பழையநினைவுகள், எதிர்பாராத சந்திப்பு, குடும்ப ஒற்றுமை, பணவரவு, தொழில் லாபம்.

மகரம்:- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, குடும்பத்தில் சந்தோஷம், தொழில் குறைவு, இடமாற்றம்.

கும்பம்;- வைத்தியச்செலவு, தாராளசிந்தை, குடும்ப விரோதம், ஆலயதரிசனம், பயணங்களால் அலைச்சல்.

மீனம்:- அநாவசியதலையீடு, பகைவர்தொல்லை, தொழில் சிக்கல், குடும்பத்தில் அமைதியின்மை, மக்களால் செலவு.

## "கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இலக்கியகாரர்கள் ஒன்றுபட வேண்டும்"

### - பேராசிரியர் சிவத்தம்பி

(யாழ்ப்பாணம்)

"இன்றைய சாலகட்டத்தில் இலக்கிய காரர்கள் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இணைந்து போக வேண்டிய நிலையிலிருக்கிறோம். இவர்களும் இவர்கள் சார்ந்த நிறுவனங்களும் இணைந்து சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது."

இவ்வாறு கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் "ஈழத்து இசை நாடக வரலாறு" நூல்வெளியீட்டு விழாவின் போது பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேராசிரியர் கா சிவத்தம்பி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை கொழும்புப் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்த கட்டுரை தான் இந்நூல் பொருளும், களமும் முக்கியமாகப் இந்நூலில் பிரதிபலிக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

விழாவுக்கு தலைமை வகித்த எழுத்தாளர் செங்கை ஆழியான் கூறியதாவது;

"யாழ். இலக்கியவட்டத்தின் 49 வது நூல் இந்த 'இந்த இசை நாடக வரலாறும்' ஐம்பதாவது நூலாக 'குறமகளின்' நூல் வெளியிட இருக்கிறோம். யாழ். இலக்கிய வட்டத்தின் இந்த இருபத்திரெண்டு வருடகால வளர்ச்சியில் இவைகள் பெரும் சாதனையாகும். கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் நூலில் விசேடமாக இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று நாடக வரலாற்றை ஆவணப்படுத்துவது. இரண்டாவது பல நாடக அறிஞர்களைக் நினைவு கூறுகிறது." என்று குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் தொடங்கிய விழாவில், செம்பியன் செல்வன், திரு. கனகசபாபதி, சொக்கன், கவிஞர் அரியாலை ஐயாத்துரை ஆகியோரும் பங்குபற்றினர். (ம)

## கோரிக்கை

(மட்டுவில்)

வரணியிலும், மிருசுவிலிலும் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிகள் இரண்டும் சகல விதங்களிலும், மக்களின் மருத்துவ சேவைகளுக்கு ஏற்றவகையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மக்களின் மருத்துவ சேவைகள் யாவும் திறம்பட நடைபெற நடவடிக்கைகளையும் யாழ். மாவட்ட சுகாதார சேவையினர் மேற்கொள்ள வேண்டும் என்று சரசாலை இந்து இளைஞர் மன்றம் யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கோரியுள்ளது. (82)

### திட்ட அமுலாக்க

## உத்தியோகத்தர்களாக பதவி மாற்றம்!

(சித்தன்கேணி)

இலங்கை பூராவும் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் கீழ் பணிபுரிந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் 1989ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களாகப் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் கீழ் பணிபுரிந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரு திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களாகப் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனா.

யாழ். மாவட்டத்தில் சேவையாற்றிய அனைவரையும் பதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களாக நியமிப்பதற்கு அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்பட்டது.

திறமை, சேவை, ஆற்றல், அனுபவம் ஆகியவற்றைக் கொண்டு ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒவ்வொரு பதில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் நியமனம் செய்யப்படவுள்ளதாகத் தெயவருகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பல்வேறு அமைச்சுக்களுக்கும் ஒவ்வொரு பதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நியமனம்செய்யப்பட்டு அபிவிருத்திச் சேவைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறியக்கூடியதாகவுள்ளது. (137)

### சிலை அலங்கரிப்பு

## கட்டணம் அதிகரிக்க முடிவு

(கொக்குவில்)

வட இலங்கை சிலை அலங்கரிப்பாளர் சங்கக் கூட்டம் அண்மையில் தலைவர் சு. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றபோது விலைவாசிகள் அதிகரிப்பின் விளைவாக கட்டணங்களை அதிகரிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. (135)

## முகாமைத்துவ பயிற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 19 பட்டதாரிகள் முகாமைத்துவ பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் பயிற்சிகள் தொடங்கப்பட்டன.

தொடர்ச்சியாக 6 மாத காலத்திற்கு அரசாங்க சேவையின் சட்டதிட்டங்கள் ஒழுங்கு விதிகள் நடைமுறைகள் தொடர்பான சகல பயிற்சிகளும் இவர்களுக்கு வழங்கப்படும். (51)

# "விளையாட்டில் மாணவர் கூடுதல் ஆர்வம் வேண்டும்"

(நாவற்குழி)

''தோல்வியே வெற்றிக்கு அறிகுறியாகும். தோல்வியைக் கண்டு மாணவர்கள் ஒதுங்கி விடாமல் தொடர்ந்தும் முயற்சி செய்தால் நிச்சயம் வெற்றியடைய முடியும்'' என்றுயாழ். நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பெனின்சுலா குறூப் பொது முகாமையாளர் திரு. சிறீஸ் கந்தகுமார் குறிப்பிட்டார்

அதிபர் திரு. த, முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. சிறீஸ்கந்தராசா தொடர்ந்து பேசுகையில்; இன்று விளையாட்டில் பங்கு பற்றும் மாணவர் தொகை குறைகின்றது என்றும் பெண் பிள்ளைகளே கூடுதலாக பங்கு பற்றுகிறார்கள். என்றும் மற்றும் மாணவர்களும் அதிகமாக பங்கு பற்ற வேண்டும் என்றும் கூறினார்.

போட்டி முடிவில் திருமதி துளசி சிறீஸ்கந்தகுமார் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினார். 368 புள்ளிகளைப் பெற்று சம்பந்தர் இல்லம் முதலாம் இடத்தையும் 294 புள்ளிகளைப் பெற்று அப்பர் இல்லம் இரண்டாம் இடத்தையும் 237 புள்ளிகளைப் பெற்று சுந்தரர் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டது. இப்போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட பத்து கிலோ மீற்றர் மரதன் ஓட்டம்போட்டியில் 112 மாணவர்கள் பங்கு கொண்டு 110 மாணவர்கள் முழு தூரத்தையும் ஓடி முடித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (107)

# "பாடசாலைகளும் ஆலயங்களும் இரு கண்கள் போன்றவை"

(புலோலி)

''பாடசாலைகளும், ஆலயங்களும் எமது இரு கண்கள் போன்றவை. பாடசாலைகளையும், ஆலயங்களையும் நல்ல முறையில் பேணிப்பாதுகாப்பதனுல் இவற்றைச் சுற்றியுள்ளமக்கள் சிறப்பாகவும், நன்றாகவும் வாழலாம்''.

இவ்வாறு குடத்தனை றோ. க. த. க. பாடசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை பங்குத்தந்தை அருட் திரு எம். ஜி. நேசநாயகம் அடிகளார் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. தோ. செபமாலை தலைமையில் நடைபெற்ற இப்போட்டியின் போது அருட்திரு நேசநாயகம் அடிகளார் மேலும் பேசுகையில் கூறியதாவது: நகரங்களின் வளர்ச்சியை வைத்துக் கொண்டு ஒரு நாடு வளர்ச்சியடைந்து விட்டதெனக் கூறமுடியாது. கிராமங்கள் வளர்ச்சியடைந்தால் தான் நாடு வளர்ச்சியடைந்துள்ளதென்று அர்த்தமாகும்.

இன்று கிராமமக்களிடையே ஏற்பட்டுள்ள கல்வி விழிப்புணர்ச்சி புதிய சமுதாயமொன்றைக் கட்டி எழுப்புவதற்கு பெரிதும் உதவியாகவுள்ளது. கிராமப்புற மாணவர்கள் மத்தியில் இலைமறை காய்போல் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணருவதற்கு பாடசாலை மட்டத்தில் விளையாட்டு கலை, கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். இப்போட்டிகளில் வெற்றி பெறும் கிராமப்புற பாடசாலை மாணவர்களை கொத்தணி, கோட்ட மாவட்ட அடிப்படையிலான போட்டிகளுக்கு அழைத்துச் செல்லப்படும்போது அம்மாணவர்கள் மத்தியில் ஏற்படும் விபரிக்க முடியாத சந்தோஷ நிலையை காணும்போது, இம் மாணவர்களை வழி நடத்தும் ஆசிரியர்கள் பெரும் பேற்றை அடைவார்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாகர் கோவில் கொத்தணி அதிபர் க. பரமகுரு பேசுகையில்; விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிதோல்வி சகஜம் ஆனல் மாணவர்கள் வகுப்பறைக்குச் செல்லும் போது விளையாட்டுப்போட்டியில் காணப்பட்டவெற்றி தோல்விகளை மறந்து நட்பாக பழகுவதையே விளையாட்டு மைதானம் சொல்லித்தரும் பாடமாகும் என்றார்.

இப்போட்டியில் 'அமைதி' இல்லம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. [61]

# ஆசிரியர் நியமனத்தில் இப்படியும் நடந்ததாம்

(மாங்குளம்)

முல்லைத்தீவில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் நியமனத்தில் முறைகேடுகள் இருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் மல்லாவி மகாவித்தியாலத்தில் கல்வித்திணைக்களத்தினரால் ஆசிரியருக்கான நேர்முகப்பரீட்சை நடைபெற்று ஒவ்வொருவரின் புள்ளி விபரங்களும் உடனே தெரிவிக்கப்பட்டதாம்.

தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களின் பெயர்பட்டியல் வெளியாகினபோது, அதிக புள்ளிகள் பெற்றவர்கள் நிராகரிக்கப்பட்டும், குறைந்த புள்ளிகள் பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டதாகவும் புகாரிடப்படுகிறது.

சிலர் விண்ணப்பித்த பாடங்களும் மாற்றப்பட்டதாகவும், இதனுல் அதிக புள்ளிகள்பெற்றவர்களும் க. பொ. த உயர் வகுப்பில் சித்தியடைந்தவர்களும் தெரிவு செய்யப்படாதது தெரியவந்ததாம். சிலர் தமது விண்ணப்பங்களை மீளாய்வுசெய்ய அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்விஷயத்தில் அதிகாரிகள் நடுநிலை வகிக்க வேண்டுமெனவும் விண்ணப்பதாரிகள் கோரியுள்ளனர் (150)

# யாழ்ற்ரன் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் யாழ்ற்ரன் கல்லூரி, ஆண்கள், பெண்கள், பிரிவில் இரண்டிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த வாரம் இப்போட்டிகள் கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம வில் நடைபெற்றது. 17 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகள் இப்பயிற்சிப் போட்டியில் பங்கு பற்றினர். யாழ்ற்ரன் கல்லூரி மாணவ, மாணவிகள் திறமையாகச் செய்து முதலிடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ற்ரன கல்லூரியின் இச் சிறந்த பெறுபேற்றுக்கு ஆசிரியர் திரு. த, மேகநாதன் சிறந்த பயிற்சி வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# வெற்றிபெற்ற பாடசாலைகள்

[உடுவில்]

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற உடுவில் கொத்தணிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள் விபரம் வருமாறு:-

13வயது ஆண்கள் இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை.

17 வயது ஆண்கள்:-1. இணுவில் சைவ மகாஜன மகா வித்தியாலயம், 2. இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயம்.

19 வயது ஆண்கள்:-உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

13வயதுப்பெண்கள்:-1. இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, 2. இராமநாதன் கல்லூரி.

17 வயதுப் பெண்கள்:-1 இராமநாதன் கல்லூரி, 2 உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, 3. இணுவில் சைவப் பிரகாச மகா வித்தியாலயம்.

19 வயதுப் பெண்கள்:- இராமநாதன் கல்லூரி. (109)

# பதவிஉயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கமநலச் சேவ சிரேஷ்ட ஆணையாளராகப் பணிபுரிந்த திரு. கே. பரமலிங்கம் வடமாகாண கமநலசேவை நிலைய ஆணையாளராகப் பதவிஉயர்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

இவரின் இடத்துக்கு முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆ. சிவகாமி நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

# மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

மாதகல் மேற்கு நுணசை அரசினர் த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 8-ம் திகதி வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் திரு. வி சேனுதிராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (72)

0 0 0

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகள் மட்டத்திலான இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 8, 9ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

# கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

(மாங்குளம்)

பாண்டியன்குளம் இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தினரால் மாபெரும் வன்னி மாவட்ட கரபந்தாட்ட வெற்றிக்கேடய சுற்றுப்போட்டியும் கலை விழாவும் எதிர்வரும் 10-ம் திகதி தலைவர் திரு. சொ. புவனேந்திரன் தலைமையில் பாண்டியன்குளம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பாண்டியன்குளம் உதவி ஆணையாளர் திரு எஸ். சுந்தரன் கலந்துகொள்வார்.

கொடியேற்று வைபவத்தில் இப்பகுதி தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் கழகக் கொடியை ஏற்றிவைப்பார்.

# நியமனம்

(அச்சுவேலி)

புத்தூர் கொத்தணி பாடசாலை அதிபர் திரு. எஸ். கணேசபிள்ளை மருதனுமடம் கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரியாக பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார். (72)

# மயானம் சீரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வளலாய் அரசங்கலட்டி மயானம் சிரமதானப்பணியின் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

கடந்தவாரம் மூன்று நாட்களாக இடம்பெற்ற இத் திருத்த வேலைப்பணிகளை அச்சுவேலி அபிவிருத்திச்சபையின் மேற்பார்வையின்கீழ் வளலாய் கிழக்கு கலைக்கதிர் சனசமூகநிலையம், வளலாய் பாரதி சனசமூக நிலையம். வளலாய் சனசமூக நிலையம் ஆகிய மூன்று நிலையங்களின் அங்கத்துவ இளைஞர்கள் சேர்ந்து மேற்கொண்டனர். (56)

# சேவை நலம் பாராட்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தில் கடந்த பல மாதங்கள் இறைபணியாற்றிவந்த அருள் திரு யூச்சின் பிரான்சிஸ் அடிகளாரின் சேவையைப் பாராட்டி புங்குடுதீவு மக்களினுல் பிரியாவிடை வைபவமொன்று நடைபெற்றது.

வேலணை, நாரந்தனை, சாட்டி பங்குத்தந்தை அருள் திரு. யே. யேசுதாசன் அடிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புங்குடுதீவு பங்குதந்தை அருள்திரு. நீக்கிலஸ் குருஸ் அடிகளார் அருள்சகோதரி ஹேர்மன் யோசப், ஆலய பரிபாலன சபை செயலாளர் றிச்சாட் டோமினிக உட்படப் பலர் இங்கு உரையாற்றினர்.

இவ்வைபவத்தில் பாடகர் குழாம், பீடப்பணிப்பாளர்கள் மரியஞ்சேனை அங்கத்தினர் நிர்வாகசபை உறுப்பினர்கள் பங்குமக்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# கோப்பாய் பிரிவு பரிசு பெற்றது

(கோப்பாய்)

அண்மையில் யுனிசெப் ஆதரவுடன் குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போடும் திறன் போட்டியில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பரிசு பெற்றுள்ளது.

இலங்கையிலுள்ள சகல சுகாதார பிரிவுகளுக்கிடையே நடாத்தப்பட்ட இப்போட்டியில் 10 சுகாதார பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இதில் யாழ். மாவட்டத்தில் கோப்பாய் சுகாதார பிரிவு மாத்திரமே தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கான பரிசினை சுகாதார அமைச்சர் பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

# சாந்தையில் பாலர் பாடசாலை

(பண்டத்தரிப்பு)

போரூட் நிறுவனம் சாந்தை கிராமத்தில் இலவச பாலர் பாடசாலையொன்றை அண்மையில் நிறுவியுள்ளது. (72)

# பகற்போசன விருந்து

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் ஜி. சி. ஈ உயர்தர வகுப்பு மாணவர்சங்க எட்டாவதுவருடாந்த பகற்போசன விருந்து எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி கோட்டக்கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயனும் அவரது பாரியாரும் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள். சிறப்பு விருந்தினராக மருதனமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு இ. க குலசேகரனும் கலந்துகொள்வார். (139)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றனர்

(யாழ்ப்பாணம்)

1989ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய மாணவர்களான செல்வன் கு. செந்தீபன், செல்வி ம. லோஜி ஆகிய இருவரும் முறையே 178, 153 புள்ளிகளைப்பெற்றுசித்தியடைந்துள்ளனர்.

ஃ ஃ ஃ

(கோப்பாய்)

அண்மையில் நடைபெற்ற புலமைப்பரீட்சையில் கோப்பாய் நாவலர் பாடசாலையைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

# வீதிகள் திருத்தம்

(கொக்குவில)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள், தெருக்கள், ஒழுங்கைகளை முன்னுரிமை கொடுத்து திருத்தவேலைகளை மேற்கொள்வதற்கான விபரங்களை நல்லூர் பிரதேச சபை விசேட ஆணையாளர் சகல சன சமூக நிலையங்களையும் கடிதமூலம் கேட்டுள்ளார். (135)

# மரதன் ஓட்ட போட்டி

[நாவற்குழி]

நாவற்குழி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட இல்லங்களுக்கிடையிலான 10 கி. மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் செல்வன் வரதராஜன் (சுந்தரர் இல்லம்) முதலாம் இடத்தையும், செல்வன் நா. சிவகுமாரன் (அப்பர் இல்லம்) இரண்டாம் இடத்தையும், செல்வன் சி பேரின்பநாதன் (சம்பந்தர் இல்லம்) மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். 112 மாணவர்கள் பங்குபற்றிய இந்த மரதன் ஓட்டப் போட்டியில் 110 மாணவர்கள் 10 கி. மீற்றர் தூரத்தையும் ஓடி முடித்தது குறிப்பிடத்தக்கதாகும். (107)

# உடற்பயிற்சி போட்டி

வடமராட்சி)

வடமராட்சி கோட்ட மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டி இம்மாதம் 9-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தலைமையில் நடைபெறும்.

கொத்தணிமட்டத்தில் 1-ம் இடத்தைப் பெற்றுள்ள அணிகள் இப்போட்டியில் பங்குபற்றும். அதிபர்கள் போட்டிக்கு வரும்பொழுது மாணவர் பெயர், பிறந்த திகதி ஆகியன அடங்கிய பட்டியலுடன் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாடசாலைகளைப் பங்குபற்ற வைப்பது கொத்தணி அதிபரின் கடமையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஒரு மாதம் துக்கதினம்

(மாங்குளம்)

முல்லைத்தீவில் அன்னபூபதிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளினுல் ஒரு மாதம் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

32 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகிக்கு துக்கதினம் அனுஷ்டிக்க விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியால் ஏற்பாடுசெய்யப்பட்டுளளதாக முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் திரு: கைலாஸ் தெரிவித்தார்.

# எதிரி நாடுகளை சமாளிக்க பாரதம் தயாராக உள்ளது

**- வி. பி. சிங்**

(புதுடில்லி)

வெளி நாடுகளின் ஆக்கிரமிப்பு, அச்சுறுத்தல்கள் எதனையும் சமாளித்து முறியடிக்க பாரதம் தயார்நிலையில் உள்ளது என்று பாரதப் பிரதமர் திரு. வி. பி. சிங் நேற்று அறிவித்தார்.

மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையின் பொன்விழாக் கொண்டாட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டபின்னர் பத்திரிகை நிருபர்களை சந்தித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

சகஜ நிலையை ஏற்படுத்துவதறகான பணிகளில காஷ்மீர் மக்களும் ஈடுபட வேண்டும் என்பது பாரத அரசின் விருப்பமாகும்.

தேசிய பாதுகாப்பு கவுன்சில் விரைவில் அமைக்கப்படும். பாதுகாப்புத்துறை, உள்துறை, நிதித்துறை வெளியுறவுத்துறை ஆகியவற்றின் கருத்துக்களை அறிந்த பிறகு அது அமைக்கப்படும் என்றார்.

## இன்று மேல்முறையீடு விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பயிலுநர் ஆசிரியர் தெரிவு தொடர்பாக செய்யப்பட்ட மேல்முறையீடுகள் பற்றிய விசாரணைகள் இன்று காலை முதல் கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

மேல்முறையீடு செய்தவர்கள் தமது முறைப்பாட்டிற்கு ஆதாரமாக ஆவணங்களுடன் குறித்த நேரத்தில் சமுகமளிக்கவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளனர். இவ்விசாரணைகளுக்கு மேல்முறையீடு செய்தவர்கள் சமுகம் தரத்தவறின் அவர்களது மேல்முறையீடு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. (12)

## மன்னாரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற குடும்பங்களுக்கு 7 கோடியே 15 லட்சம் ரூபாவும் வழங்கியுள்ளது. ஏறக்குறைய 20, 000 குடும்பங்கள் மன்னாரில் புனர் வாழ்வுத்திட்டத்தால் நல்ல பலனைப் பெற்றுள்ளதாகவும் மேலும் சகல கொடுப்பனவுகளும் துரிதமாக வழங்க நடவடிக்கைகள் எடுப்பதாகவும் புனர்வாழ்வு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பட்டதாரிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரச, தனியார்துறைகளில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுசம்பந்தமான தகவல் திரட்டும் பணியை அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளது.

இத்தகவல்களை, பல்கலைக் கழகங்களுக்குஅனுப்பி வேலைத் தரங்களுக்கேற்ற, தகுதி வாய்ந்த பட்டதாரிகளைத் தெரிவுசெய்யும் பொறுப்பு, பல்கலைக்கழக அதிகார பீடத்துக்கே வழங்கப்படவுள்ளது என்றும் உயர் கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது. இத்திட்டம் இவ்வாண்டு முதல் தொடர்ந்து அமுல்செய்யப் படவுள்ளது. (அ)

## ஹமீத் - தமிழ்காங்கிரஸ் தூதுக்குழு சந்திப்பு

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தூதுக்குழு, நேற்று விஞ்ஞான, உயர்கல்வி, தொழில் நுட்ப அமைச்சரும், வடக்கு-கிழக்கு சமாதானக் குழுவின் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீதைச் சந்தித்து வடக்குக் கிழக்கு மாகாண மக்களின் பிரச்னைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தது.

திரு. குமார் பொன்னம்பலம் தலைமையிலான இத்தூதுக் குழுவில் திரு. மோதிலால் நேருவும் இடம்பெற்றிருந்தார்.

ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத் வடக்கு – கிழக்கு மாகாண மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாகப் பல்வேறு அரசியல் கட்சிகளையும் தூதுக் குழுக்களையும் சந்தித்து தொடர் பேச்சுவார்த்தை நடாத்திவருவது தெரிந்ததே. (அ)

## சந்தேக நபர் இருவர் கைது

(கொழும்பு)

தென் மாகாணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியை கொல்வதற்கு ஜே வி. பி. இயக்கத்தினருடன் இணைந்து சதிசெய்ததாகச் சந்தேகிக்கப்படும் இரண்டு ரிசார்வ் பொலிஸார் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்பகுதியில் கைதான ஜே. வி. பி. இயக்கத் தலைவர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்தே இவ்விரு பொலிசாரும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் (அ)

## விபத்தில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-ஆட்டோ விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நல்லூர் பின் வீதியில் இடம்பெற்ற விபத்தில், கோண்டாவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் தனேஸ்வரன் (வயது 50) என்பவரே படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## புதிய அமைச்சரவைகள் பதவியேற்பு

(புதுடில்லி)

மத்திய பிரதேசத்தில் திரு. சுந்தர்லால்பட்வா, ஒரிஸாவில் திரு. பிஜுபட்னயர், இமாச்சல பிரதேசத்தில் திரு. சாந்தகுமார் ஆகியோர் தலைமையில் புதிய அமைச்சரவைகள் நேற்று பதவியேற்றன.

அருணாசலப் பிரதேசத்தில் புதிய முதலமைச்சராக திரு. ஜெகான்செபான் நாளை பதவியேற்பார்.

## 360 கோடி ரூபா நஷ்ட ஈடு

(புதுடில்லி)

போபால் விஷவாயுக் கசிவினால் பாதிக்கப்பட்ட ஐந்து லட்சம் பேருக்கு 360 கோடி ரூபா உதவித்தொகை வழங்கப்படவிருப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

## வடக்கு கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு ஆயுதப்படையினரும், பொலிசாரும் தேவை.

நாட்டின் சாந்த மக்களுடன் எமது பாதுகாப்புப படையினர் யுத்தம்செய்வதை நான் விரும்பவில்லை.

எமது சொந்த மக்களைக் கொல்வதற்கு ஆயுதப்படையும் பொலிசும் இல்லை. அவர்களைப் பாதுகாக்கவே படையினர் உள்ளனர் என்றார்,

## அமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

சுங்க நடவடிக்கைகளுக்கு முரணான முறையில் திரு. வரதராஜப்பெருமாள் இந்திய விஜயம் மேற்கொண்டது குறித்து சுங்க இலாகா விசாரணையை ஆரம்பித்துள்ளது தெரிந்ததே.

இதேவேளையில் மற்றொரு ஆங்கிலப் பத்திரிகைக்கு அவர் தெரிவித்திருப்பதாவ:

நான் தெற்கு இந்தியாவுக்கும் போகவேண்டும்! திருகோணமலை 7,600 சதுரமைல் விஸ்தீரணத்தைக் கொண்டதாகவிருக்கிறது. இதில் 3,600 சதுரமைல் விஸ்தீரணத்தில் காடுகள் உள்ளன

இந்திய அமைதிப்படை திருகோணமலையிலிருந்து வாபஸ் ஆன பிறகு நீங்கள் இந்தியாவில் தஞ்சம் கோருவீர்களா என மேற்படி பத்திரிகையின் நிருபர் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

திருகோணமலைப் பகுதியில் 26 லட்சம் மக்கள் உள்ளனர்.

ஜனநாயக அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவசியமேற்படும்போது சகல இளைஞர்களுக்கும் நாம் பயிற்சி அளித்து ஆயுதங்களையும் வழங்குவோம்.

அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகளின் உதவியையும் நாம் பெறுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

எமது ஈழத்தின் சுதந்திரத்தையும், எல்லைப்புற இறைமையையும் நிலைநாட்டுவதற்கு சர்வதேச உதவியையும் நாம பற்றுக்கொள்வோம்'' என்றார். (அ)

## மாங்குளத்தில் அடவு நகைகள் இம்மாதம் வழங்கப்படும்

(மாங்குளம்)

மாங்குளம் மக்கள் வங்கி அடவு நகைகள் இம்மாதத்துக்குள் வழங்கப்படுமென வட பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் மாதத்துக்குள் பணம் கட்டியவர்களது அடவு நகைகள் இம்மாதத்துக்குள் வழங்கப்படுமென்றும் பின்பு பணம் கட்டியவர்களது நகைகள் நாளடைவில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் வட்டிச் சலுகை நீடிக்கப்பட்டுள்ளதோடு, வாடிக்கையாளர்களது நலன்கருதி மாங்குளம் மக்கள் வங்கி நகரப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. (150)

## எதிர்காலத்திலும் வேலைத் திட்டங்களுக்கு யூனிசெப் உதவி கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் யூனிசெப் நிதியுதவித் திட்டத்தின் கீழ் நடைபெறும் வேலைத் திட்டங்களை யுனிசெப் திட்ட அதிகாரி திரு. ஹை. பி. ஸ்காண்ட்லன் தலைமையிலான குழு நேற்றுப் பார்வையிட்டது.

இவர்கள் நேற்று மாலை மூளாயில் நடைபெற்ற பாலர் கல்வி நிறுவனத்தின் முதலாவது டிப்ளோமா பயிற்சி பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினர் அங்கு ஸ்காண்ட்லன் உரையாற்றுகையில் 'இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுவதாக தெரிவித்த அவர் இந்நிறுவனத்தின் பயிற்சித் திட்டங்களுக்கு யுனிசெப் எதிர் காலத்திலும் நிதியுதவி வழங்குமென தெரிவித்தார்.

இவ்விழாவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜி. பரராஜசேகரம், உளவள நிலைய இயக்குநர் அதிவண. எஸ். எம். செல்வரட்ணம், வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன், கோட்டக்கல்வி அதிகாரி ஆர் சிவானந்தமும் உரையாற்றினர். இவ்வைபவத்திற்கு திருமதி பி. இராஜேஸ்வரன் தலைமை தாங்கினர். (12)

## சிங்களச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பதினன்கு பேருக்கு மீண்டும் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

சிங்கள மொழி சித்தியடையாத காரணத்தால் பதவி இழந்த 14 ஊழியர்களுக்கு 20 ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ் மாவட்டப் பிடவைக் கைத் தொழில் திணைக்களத்தில் மீண்டும் வேலை கிடைத்துள்ளது.

இவ்வூழியர்கள், 1970ம் ஆண்டு செப்டம்பர் 30ந் திகதி பதவி இழந்தவர்கள். இவர்கள் செய்த மேன்முறையீட்டை அடுத்து, புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு எஸ். தொண்டமான், புதிய அரசகரும மொழிச் சட்டவாக்கத்திற்கமைய இவ்வருடம் ஜனவரி முதலாந் திகதி முதல் புதிய சம்பள அடிப்படையில் நியமனம் வழங்கியுள்ளார்.

இவர்கள் சேவையில் இல்லாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்படவில்லை. இவர்களுக்கான புதிய ஊதியம் 1 800 ரூபா என அறிவிக்கப்பட்டு, ஜனவரி மாதத்திற்கான சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக நியமனம் வழங்கப்பட்ட பதின்நான்கு பேர்களில் கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் என்பவர் பெப்ரவரி மாதம் இருபத்தாறும் திகதி ஐம்பதைந்து வயது பூர்த்தியாவதால் ஓய்வூதியததைப் பெறவுள்ளார் (12)

## யாழ். மாநகர சபை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பவர்களையும், மின்மானிகளில் மோசடி செய்பவர்களையும் இனங்கண்டு மின் இணைப்புக்களைத் துண்டித்து அபராதம் செலுத்த நடவடிக்கை எடுத்த பின்னர் மாநகரசபை மின்சாரம் விற்பனவு செய்வதில் இழப்புக்களை ஈடுசெய்யக் கூடியநிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது, மின்சார பாவனையாளர்கள் மாநகரசபைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பினல் மாதாந்தம் நாம் இழந்துவந்த ஐந்துலட்ச ரூபா இழப்பை இப்போது நீக்கி மாநகரசபை மின்சார விற்பனவு மூலம் லாபத்தை ஈட்டி வருகிறது.

அரசாங்கமும், மாகாண அமைச்சும் யாழ்ப்பாண மாநகரசபைக்குத் தவணை முறையில் செலுத்தக் கூடிய கடனை வழங்குமானல் மின்சார சபைக்கு மாநகர சபை செலுத்தவேண்டிய நிலுவையைச் செலுத்தி உடனடியாக மின் வலு அதிகரிக்கும் உபமின் நிலையங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். மின்சாரசபை மின் நிலுவையை வைத்திருக்கும் உள்ளூராட்சி சபைகளின் பகுதியில மின்சார அபிவிருத்தி வேலைகளை செய்ய மறுப்பதால் இப்பிரச்சினையை யாழ்ப்பாண மாநகர சபையும் எதிர்நோக்கியுள்ளது

இப்பிரச்சினை கூடியவிரைவில் தீர்த்துவைக்கப்பட்டு, 10 உப மின் நிலையங்களும் கூடிய மின் வலு உப மின்நிலையங்களாக மாற்றப்படும் இதனுல் வரியிறுப்பாளர்களுக்குச் சீரான மின்சாரம் வழங்கமுடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். (12)

## விண்வெளிக்கலம் தரை இறங்கியது

(நியூயோர்க்)

அமெரிக்க விண்வெளிக் கலமான 'அட்லான்ரா' பூமியைச் சுற்றி ஐந்து நாள் பயணம் மேற்கொண்ட பிறகு நேற்று பத்திரமாகத தரையிறங்கியது.

இரகசிய இராணுவ நோக்குடன் அப்பயணம் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது.

## பணமாகசெலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளையில் பொதுக் காப்புறுதிசெய்யும்போதுகாசோலை காசுக்கட்டளை மூலமாகவே பணம் செலுத்தப்பட்டுவந்தது.

தற்போது மக்கள் நலன் கருதி இதனைக் பணமாகச் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளையில் ஆயுள் காப்புறுதித் தொகையையும் பணமாகச் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## விரைவில் பதவியேற்பு

(சென்னை)

பாண்டிச்சேரியில் புதிய தி. மு. க. — ஜனதா கூட்டு அரசின் பதவியேற்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கு வழியமைக்கும் வகையில், மேற்படி யூனியன் பிரதேச கூட்டுப்பேரவையைக் கலைத்து விடும்படி தற்போதைய பாண்டிச்சேரி அரசு அதன் துணைநிலை ஆளுநர்க்குப் பரிந்துரை செய்துள்ளது.

## ஆசிரியர் இடமாற்றங்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படி ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ச் மெண்டிஸ் தகவல் தெரிவித்துள்ளார்.

தத்தமது பிரதேசங்களில் உள்ள பதவிகளுக்கான வெற்றடங்கள் குறித்த விபரத்திரட்டு தயாரித்து, ஆணைக்குழுவுக்கு விரைவில் அனுப்பி வைக்குமாறு, சகல மாகாண மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனனர்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் ஏறக்குறைய 15,000 ஆசிரியர்களது இடமாற்றங்கள் இதனுல் பாதிப்படைந்துள்ளதாகவும், அறியப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10006/81. Eelanadu P. O. Box No. 49. Telegram; Eelanadu; Telephone: 2291,